# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, மார்ச் 01, 2019. இதழ் - 53








மனித உணர்வுகளினை அடிப்படையாக கொண்டு நகரும் சந்தைப்படுத்தல் உத்திகள்

பக்கம் - 10




அரங்கமும் பெண்கள் கால்பந்தும்...

அரங்கம் தனது 50 வது இதழ் மற்றும் ஒரு வருட பூர்த்தி

பக்கம் - 03

கிழக்கு மாகாணத் தேர்தல்களும் தமிழ் கட்சிகளும்

பக்கம் -04



குடிநோயாளர்களின் ஒரு தேவதை : செல்விகா சகாதேவன்

பக்கம் - 07



## மட்டக்களப்பில் இறக்கும் மாடுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாடுகள் பெருமளவில் இறப்பதாக கால்நடை விவசாயிகள் முறையிடுகின்றனர்.

சுமார் 5000 இற்கும் அதிகமான மாடுகள் இவ்வாறு இறந்துபோய்விட்டதாகவும், இந்த இறப்புக்கள் தொடர்வதாகவும் விவசாயிகள் கூறுகிறார்கள்.

குறிப்பாக பண்ணைகளில் காடுகளை அண்டிய பகுதிகளில் இவ்வாறு கால்நடைகள் இறப்பது அதிகமாக இருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள். இதனால், தாம் மிகுந்த வருமான இழப்புக்கு ஆளாகியிருப்பதாகவும், வறுமையால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பலர் தமது கால்நடைகள் இறப்பது குறித்து அழுதுகொண்டே முறைப்பாடு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## சொத்துக்களை பகிரங்கமாக பிரகடனம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்

### டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நாஷனல் ஏற்பாடு



Hon. Tharaka Balasuriya · Hon. Vasudeva Nanayakkara · Hon. M.A. Sumanthiran · Hon. Vidura Wickramanayake · Hon. Eran Wickramaratne

டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நாஷனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று தமது சொத்துக்கள் உடமைகளை வெளிப்படையாக அறிவித்து பிரகடனம் செய்துள்ளது.

டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நாஷனல் அமைப்பின் இலங்கைப் பிரிவால் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் தரக்க பாலசூரிய, வாசுதேவ நாணயக்கார, மதியாபரணம் ஆப்ரஹாம் சுமந்திரன், விதுர விக்கிரமநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் எரன் விக்கிரமரட்ன ஆகியோர் தமது சொத்துக்கள் மற்றும் உடமைகளை பகிரங்கமாக பிரகடனம் செய்தனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## சீனாவின் கட்டுப்பாட்டிலுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அமெரிக்க அதிகாரிகள் குழு பார்வை

-- அ.நிக்ஸன் ---

அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகள் குழு ஒன்று சீனாவுக்குச் சொந்தமான தனியார் நிறுவனத்தின் மேற்பார்வையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பார்வையிட்டுள்ளது. கடந்த புதன்கிழமை அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குச் சென்ற அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் பல்வேறு விவகாரங்கள் குறித்து உரையாடியுள்ளனர்.

அம்பாந்தோட்டை கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி கொமடோர் அசோக விஜேசிறிவர்த்தனவைச் சந்தித்து, துறைமுகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் அமெரிக்கா இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள், இரு நாட்டுக் கடற்படையினரின் கூட்டுச் செயற்பாடுகள் குறித்தும் உரையாடப்பட்டதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கூறியுள்ளது.

சுமார் இரண்டு மணிநேரம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அம்பாந்தோட்டைத்

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## புதிய இரண்டரை மாத நெல்லின பரீட்சார்த்த அறுவடை வெற்றி!



(காரைதீவு சகா)

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இரண்டரை மாத நெல்லினமான பிஜி.250 என்ற நெல்லினத்தின் பரீட்சார்த்த செய்கை நிந்தவூர் விவசாயப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டரை மாதத்தின் பின்னரான அறுவடை நேற்று(27) நிந்தவூரில் நடைபெற்றது.

நிந்தவூர் பிரிவு விவசாயப் போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில்நடைபெற்ற இவ்வறுவடை விழாவில் விவசாய உதவிப்பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் விவசாய பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்கள் ஏனைய விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். சிறப்பான அறுவடையைக் காண்பித்திருக்கும் இந்த நெல்லினத்தை இனிமேல் விவசாயிகள் விரும்பிப் பயிரிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.




## மயிலவட்டுவான் பாலத்தை உடனடியாக அமைக்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பணிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலவட்டுவான் ஆற்றுக்கு மேலாக பாலத்தினை அமைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு மாவட்ட நிருவாகம் மற்றும் நீர்ப்பாசன, பிரதேச செயலாளர்கள் அடங்கிய குழுவிற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பணித்தது.

2019ஆம் ஆண்டுக்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் திங்கட்கிழமை (25) நடைபெற்றவேளை ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் பிரதேச மக்கள் மயிலவட்டுவான ஆற்றுக்கு மேலாக பாலம் அமைக்க வேண்டும், போக்குவரத்துப் பாதைகளை புனரமைத்து தரவேண்டும், யானைத் தாக்குதலில் இருந்து தப்புவதற்கு முறையான திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்ற தினத்தில் கடந்த திங்கட்கிழமை இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கூட்டம் ஆரம்பதித்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மக்களது பிரச்சினைகளை தீர்த்துவிட்டு கூட்டத்தைத் தொடருமாறு கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, போராட்டக்காரர்களில் இருவரை அழைத்து அவர்களது பிரச்சினைகளை கேட்டு, அப்பிரச்சினை தொடர்பில் ஆராயும் போது, குறித்த மயிலவட்டுவான் ஆற்றுக்கு மேலாக பாலம் அமைப்பது தொடர்பில் மத்திய, மாகாணத்திணைக்களம், வீதிப் போக்குவரத்து அதிகார சபை, வீதி அபிவிருத்தித்திணைக்களம் என யாரும் அதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளாமை காரணமாக குறித்த பிரதேசத்திற்கு அனைத்து திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் அடங்கியோர் விஜயம் செய்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராஜாங்க அமைச்சரான எம்.எஸ்.எஸ். அமீர் அலி பணித்தார். அத்துடன், அந்த மக்களது பிரச்சினைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் திணைக்களத் தலைவர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

## ஆசிரிய ஆலோசகர்களின் பணிப்பகிஸ்கரிப்புப் போராட்டம் 5 வது நாளாகத் தொடர்கிறது!

### இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமாம்!



(காரைதீவு நிருபர் சகா)

நாடளாவியரீதியில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் பணிப்பகிஸ்கரிப்புப் போராட்டம் நேற்று(28) வியாழக்கிழமை ஐந்தாவது நாளாகத் தொடர்ந்தது.

இலங்கை சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள் தொழிற்சங்கம் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. இதனால் வலயமட்டச் செயற்பாடுகள், பாடசாலை மேற்பார்வைகள், போட்டி நிகழ்ச்சிகள், பி.எஸ்.ஐ.தரிசிப்பு, குழுத்தரிசிப்பு, வெளிவாரி மேற்பார்வை அனைத்தும் செயலிழந்துள்ளன. மேலும் சமகாலத்தில் நடாத்தப்படவேண்டிய கோட்டமட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் நிறுத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. தமக்கான நிரந்தரமாக இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையை மேலும் தாமதிக்காமல் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன்னும் அரசாங்கத்திடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என சங்கத்தின்தேசிய தமிழ்ப்பிரிவு இணைப்பாளர் செல்லையா பிரபாகரன் தெரிவித்தார். சம்மாந்துறை வலய ஆசிரியர் ஆலோசர்களின் கூட்டம் சம்மாந்துறை அல்மர்ஜான் மகளிர் கல்லூரியில் ஆசிரிய ஆலோசகர் சங்கப்பிரதிநிதி எம்.ஐ.ஹஜ்ஜி மொகமட் மௌலவி தலைமையில் நடைபெற்றது.

அங்கு ஆசிரிய ஆலோசகர்கள் கிழக்கிலிருந்து வெளியாகும் அரங்கம் வாராந்த பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

## லெ.முருகபூபதியின் “சொல்லத் தவறிய கதைகள்”

“கா” கலை இலக்கியவட்டம்
மற்றும்
“அரங்கம்” பத்திரிகை ஏற்பாட்டில்
லெ . முருகபூபதியின்
“சொல்லத் தவறிய கதைகள்”

நூலறிமுகம்

**சிறப்பு விருந்தினர்**
**திரு.வெ.தவராசா**
சிரேஷ்ட உதவிச்செயலாளர்,
கல்வியமைச்சு, கிழக்கு மாகாணம்,

மார்ச் மாதம் முதற் செவ்வாய் அன்று (05/03/2019)

மாலை 4 மணியளவில்

“அரங்கம்” கேட்போர் கூடத்தில்
(இல.227 பார் வீதி, மட்டக்களப்பு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்வு சிறப்புற தங்கள் வருகையை மதிக்கிறோம்.

**நிகழ்வுகள்**

1. **மங்கள விளக்கேற்றல்**
2. **வரவேற்புரை:** திருமதி.ம.விஜயேஸ்வரி
3. **தலைமையுரை:** திரு.பூ.சிவகன்
   சிரேஷ்ட ஊடகவியலாளர், பிரதம ஆசிரியர் அரங்கம்.
4. **உரை:** “சமூக கலை இலக்கிய வெளியில் லெ.முருகபூபதி” பேரா.செ.யோகராசா
5. **பிரதி வழங்கல்:** முதன்மை பிரதி பெறுநர் சைவப் புரவலர்.வி.ரஞ்சிதமூர்த்தி
   தலைவர் மட்டு தமிழ்ச்சங்கம்
6. **மதிப்புரை:** எழுத்தாளர் வி.கௌரிபாலன்
7. **கருத்துரை:** கவிதாயினி நிலாந்தி சசிக்குமார்
8. **கருத்துப் பகிர்வுகள்**
9. **பதிலுரை:** மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி
10. **நன்றியுரை:** திரு.சொ.பிரசாத் செயலாளர் “கா” கலை இலக்கிய வட்டம்




தொடர்ச்சி...

## சீனாவின் கட்டுப்பாட்டிலுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அமெரிக்க அதிகாரிகள் குழு பார்வை

துறைமுகத்தை அனைத்து நாடுகளினதும் சுதந்திரமான பயன்பாட்டுக்கு அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருந்தன.

இந்த நிலையில் அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் அம்பாந்தோட்டைக்குப் பயணம் செய்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ஜெயந்த சில்வா, அமெரிக்க தூதரக பாதுகாப்பு ஆலோசகர் டக்ளஸ் ஹெஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரங்கமும் பெண்கள் கால்பந்தும்...

அரங்கம் தனது 50 வது இதழ் மற்றும் ஒரு வருட பூர்த்தி ஆகியவற்றை எட்டியுள்ளதை கடந்த வாரங்களில் நாம் பேசியிருக்கிறோம். இவை பெரிய சாதனைகள் அல்ல என்பதையும் அப்போது குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், இந்த நிறைவுகளோடு நாம் அடுத்த கட்டத்தில் காலடி எடுத்து வைக்கவுள்ளோம். இந்தக் "காலடி" எங்கள் பெண்களின் முன்னேற்றத்தில் நாமும் கைகொடுப்பதை அடிப்படையாகக் கொண்டது.

மட்டக்களப்பை பொறுத்தவரை இந்த நகரில் கால்பந்து விளையாட்டுக்கு ஒரு வரலாறு இருக்கிறது. பல ஏற்ற இறக்கங்களை அது கண்டிருக்கிறது.

இப்போது "போர்" முடிவை அடுத்து, எங்கள் பெண்களும் இங்கு கணிசமாக கால்பந்து விளையாட முனைந்திருக்கிறார்கள். நகரப் பகுதியைத் தாண்டி கால்பந்து ஏனைய கிராமங்களுக்கும் பெருமளவில் சென்றுள்ளது. இவர்களில் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட படுவான்கரை பகுதியை சேர்ந்த பெண்கள் அண்மைக்காலமாக சிறப்பாக செயற்பட்டு வருகிறார்கள். இவை குறித்து அரங்கத்தின் "படுவான் திசையில்.." பத்தியின் ஊடாக பல தடவைகள் நாம் எழுதியும் உள்ளோம்.

இப்போது அவர்களது சாதனைக்கான பயணத்தில் நாமும் இணையவிருக்கிறோம்.



படுவான்கரையில் கால்பந்தில் கலந்து விளையாடும் பெண்கள் அணிகளைப் பொறுத்த வரை அவை மிகவும் பிந்தங்கிய, அதே வேளை போரினால், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவை. ஆனால், இவற்றையும் கடந்து மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இவர்கள் மட்டக்களப்புக்கு நல்ல பெருமையை சேர்த்துக் கொடுத்துள்ளன.

ஆனால், இந்தப் பகுதிகளின் வறுமை, கலாசார, பண்பாட்டு நிலைமைகள் அங்கு பெண்கள் இப்படியான போட்டிகளில் ஈடுபவதில் பெரும் சவால் இருக்கின்றன.

இங்குதான் நாம் அவர்களுடன் இணைந்து எமது மண்ணுக்கும் பெண்களுக்கும் பெருமை சேர்ப்பதில் கரம் சேர்க்க விளைகிறோம்.

போட்டியாளர்களின் போஷாக்கு முதல் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றுக்கான சில பொறுப்புக்களை அரங்கம் ஏற்கவுள்ளது. எமது உறவுகளின் உதவியுடன் அவற்றை நாம் ஒரு சவாலாக ஏற்றுச் செயற்படவுள்ளோம்.

குறிப்பாக இவற்றில் ஒரு கழகத்தை அரங்கம் பொறுப்பேற்கும் அதேவேளை, ஏனைய கழகங்களுக்கு உதவுபவர்களை அவர்களுடன் தொடர்புபடுத்திவிடும் பணியையும் நாம் செய்வோம்.

இதன் முன்னோட்டமாக வரும் மகளிர் தினத்தை முன்னிட்டு இரு படுவான்கரை பெண் கால்பந்தாட்டக் கழகங்கள் கலந்துகொள்ளும் போட்டி ஒன்றை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துடன் இணைந்து அரங்கம் நடத்தவுள்ளது. அன்று எமது திட்டம் குறித்து முழுமையான அறிவிப்பை நாம் வெளியிடுவதுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் அங்குரார்ப்பணம் செய்வோம்.

## பெண்களே எமது பெருமை

கால்பந்தாட்டத்தில், பெண்கள் முன்னேற்றத்தில், மட்டக்களப்பில் ஆர்வமுள்ள எமது உறவுகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் எம்மோடு இணையலாம். உங்கள் பிள்ளைகளின், சகோதரிகளின் முன்னேற்றத்துக்கு எங்களுடன் இணைந்து கரம் கொடுக்க உங்களை நாம் இரு கரம் கூப்பி அழைக்கிறோம். சிறுதுளியே பெருவெள்ளம். அவர்களது வெற்றியே எதிர்காலத்தில் எமது வெற்றி. அவர்களே எமது நாளைய பெருமை.

## பழைய மாணவர் சங்கங்கள்

மட்டக்களப்பின் முன்னணிப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் உலகெங்கும் கிளைகளைக் கொண்டு இயங்குகின்றன. தமது பள்ளிக்கூடங்களுக்காகவும் மண்ணுக்காகவும் அவர்கள் பல செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை நாம் பாராட்டுகிறோம். அதேவேளை, இப்படியான வசதிகுறைந்த பாடசாலைகள், கழகங்களுக்கும் உதவ நீங்கள் முன்வரவேண்டும் என்று அன்போடு உங்களை அழைக்கிறோம். நீங்கள் எங்களோடு இணைந்து செயற்பட முன்வரும் நிலையில் இங்கு நாம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். மட்டக்களப்பின் நகரங்களில் மாத்திரம் மையம் கொள்ளாமல், நகரின் அனைத்து மூலைகளிலும் உள்ள திறமைகளுக்கு நாம் "அரங்கம்" அமைப்போம். நண்பர்களே இது உங்களுக்கான வாஞ்சையுடனான ஒரு அழைப்பு. எம்மை தொடர்புகொள்ளுங்கள், எமது வீராங்கனைகளுக்கு உதவுவோம். மண்ணின் பெருமையை மீண்டும் உயர்த்திப் பிடிப்போம்.

அன்புடன்

**சீவகன் பூபாலரட்ணம்**
seevagan@hotmail.com
(0094713999091)

# காதல் தோல்வியை உங்கள் வாழ்வின் வெற்றியாக்குங்கள்


அதிக பாசம் வையுங்கள் அது தவறல்ல ஆனால் பைத்தியகாரத்தனமான பாசம் வைக்காதீர்கள்.ஏனென்றால் முடிவில்லாத வாழ்க்கையும் இல்லை பிரிவில்லாத உறவும் இல்லை.

நம்மோடு இருக்கும் உறவுகளை வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் நாம் இழந்து தான் ஆக வேண்டும்.

இன்று நம் சமூகத்தில் தற்கொலை என்பது சாதாரண ஒரு விடயமாக போய் விட்டது. இந்த தற்கொலை சம்பவங்களை ஆராய்ந்தால் அதில் பெரும்பாலானவை காதல் தோல்வியால் நிகழ்கின்றன. இளம் வயதினர் வாழ வேண்டிய வயதில் தற்கொலை செய்து கொள்கின்றனர். இன்னும் சிலர் அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகி மனநல வைத்தியர்களிடம் சிகிச்சைக்குச் செல்கின்றனர். காதல் என்பது ஒருவரின் வாழ்வை வெற்றியை நோக்கி கொண்டு செல்ல வழிவகுக்க வேண்டுமே தவிர மரணத்தை நோக்கி அல்ல.

நாம் எல்லோரும் காதலிக்கிறோம் ஆனால் எல்லோருடைய காதலும் திருமணத்தில் முடிவதில்லை. காதல் தோல்வி என்பது வாழ்கையின் தோல்வி அல்ல அது அந்த வயதிற்குரிய தோல்வி. நம்முடைய அடுத்த வயது வரும் போது மனம் பக்குவப்பட்டு அந்த தோல்வியை முறியடித்து விடும்.

காதலில் தோல்வி அடையும் போது ஏன் தற்கொலை செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் அவ்வளவு பெரிய முட்டாளா? உங்கள் தற்கொலையில் யாருக்கு என்ன லாபம் உள்ளது என்று சிந்தித்து பாருங்கள். காதலில் வெற்றியடைந்தவர்களை



யாரும் மதித்து கொண்டாடுவதில்லை. மாறாக மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக வாழ்பவர்களையும் தமது திறமைகளால் பலரின் வாழ்வு உயரக் காரணமாக இருப்பவர்களையும் தான் இந்த உலகம் விரும்புகின்றது. காதல் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி தான். இறைவன் நம் எல்லோருக்கும் ஏதோ ஒரு திறமையை கொடுத்திருக்கிறான். வாழ்க்கை ஒரு முறை தான்.

அதை அர்த்தமுள்ளதாக வாழ வேண்டும். காதல் தோல்வி என்பது மனதில் ஆறாத காயங்களை ஏற்படுத்தும் ஒரு கொடுமையானவலி தான். அந்த நேரத்தில்நம்முடைய மனம் கட்டுப்பாட்டை இழந்து நேசித்தவர்களை மறக்க முடியாமல் நம்மை தவறான வழியில் இழுத்து செல்லும். காதலும் ஒரு வகையான போதை தான். அதற்கு அடிமையாகிவிடும் போது அதிலுருந்து வெளியேறுவது கடினம் தான். ஆனால் தீர்வு இல்லாத பிரச்சினை என்று ஒன்று இந்த உலகத்தில் இல்லலவே இல்லை. காதலில் தோல்வி ஏற்படும் போது அதிலிருந்து எப்படி வெளியே வருவது என்பதற்கு சில வழிகள் உண்டு. அவைஎன்னவென்று பார்ப்போம்.

தனிமையை தவிர்த்து கொள்ளுங்கள். தனிமையில் இருக்காதீர்கள் ஏனென்றால் தனிமையில் இருக்கும் போது காதலித்தவரின் நினைவுகள் அதிகமாக வரும். நீங்கள் உங்கள் காதலருடன் சேர்ந்து சென்ற இடங்களுக்கு உங்கள் நண்பர்களுடன் செல்லுங்கள். அடிக்கடி நண்பர்களுடன் செல்லுங்கள். அப்படி செய்கையில் அந்த இடங்களில் உங்கள் நண்பர்களுடனான இனிமையான நினைவுகள் மட்டுமே உங்களுக்கு இருக்கும்.

நீங்கள் காதலித்தவரை நினைவுபடுத்தும் பொருட்களை அப்புறப்படுத்துங்கள். காதலிக்கும் போது நீங்கள் பெற்றுக் கொண்ட பரிசுப் பொருட்கள்அனைத்தையும் ஒன்றாக சேர்த்து எங்காவது தூக்கி வீசி விடுங்கள். ஏனெனில் உங்கள் வாழ்க்கைக்கு அவை தேவையற்றவை. அர்த்தமற்ற

**சகி**

தேவையற்ற நினைவுகளை அவை உங்களுக்கு தரும்.



நீங்கள் காதலித்தவரை மறக்க நினைக்காதீர்கள்.

நீங்கள் காதலித்த நபரை மறக்க நினைக்காதீர்கள், ஏனெனில் நீங்கள் மறக்க நினைக்கும் போது தான் அவர்கள் அதிகம் நினைவில் வருவார்கள்.

அவர் நினைவு வந்தால் அது ஒருபுறம் வரட்டும் நீங்கள் உங்கள் வேலையில் கவனத்தை செலுத்துங்கள்.

என்ன காரணத்திற்காக நீங்கள் காதலித்தவர் உங்களை பிரிந்தாரோ அந்த காரணத்திற்காக அவரை வாழ்த்தி அனுப்புங்கள்.

உங்களுக்கு பிடித்தவற்றை செய்யுங்கள்.

உங்கள் காதலருடன் இருக்கும் போது உங்களுக்கு பிடித்த பலவற்றை அவர்களுக்காக செய்யாமல் விட்டிருப்பீர்கள். அவற்றை தேடி அதில் ஈடுபடுங்கள். உங்களுக்கு பிடித்த மாதிரி உடை அணியுங்கள், பிடித்ததை உண்ணுங்கள், நல்ல இசையை கேளுங்கள், நீண்ட தூர நடை அல்லது உடற்பயிற்சியில் ஈடுபடுங்கள்.

புதிதாக ஒன்றை கற்றுக் கொள்ளுங்கள்

உங்களுக்கு பிடித்த எதையாவது புதிதாக கற்றுக் கொள்ளுங்கள். அது மனதிற்கு ஒரு மாற்றத்தை தரும். அத்துடன் சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை படித்து பாருங்கள். அவர்கள் கடந்து வந்த கடினமான துன்பங்களும் அவர்களது துயரம் நிறைந்த அனுபவங்களும் உங்கள் வலிக்கு நிச்சயமாக ஒருஆறுதலை தரும். பிரிந்து சென்ற உங்கள் காதலர் திரும்பி வரவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். பிரிந்து சென்ற பிறகு நீங்கள் காதலித்தவரிடம் இருந்த நல்ல குணங்கள் மட்டுமே உங்கள் கண்ணுக்குதெரியும். ஆனால் நீங்கள் மீண்டும் சேர்ந்தால் அந்த

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கிழக்கு மாகாணத் தேர்தல்களும் தமிழ் கட்சிகளும்

'அரசாங்கத்தையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணம் முஸ்லீம்களுக்கும் வடக்கு மாகாணம் தமிழர்களுக்கும் ஏனைய மாகாணங்கள் சிங்களவர்களுக்கும் உரியது' என்ற மறைமுகக் கொள்கையின் அடிப்படையில் இயங்கி வருகின்றன என்பது பலருக்கும் தெரிந்த உண்மையாகும்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் 11 உறுப்பினர்களை வைத்துக் கொண்டு 7 உறுப்பினர்களைக் கொண்டிருந்த முஸ்லீம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியினை விட்டுக் கொடுத்தனர். இந்த விட்டுக்கொடுப்பில் கூட கிழக்குமாகாண ஆளுநராக ஒரு தமிழரையும் ஒரு அமைச்சை சிங்களவருக்கும் வழங்கி கிழக்கின் பல்சமூகத்தின் பிரதிநிதித்துவத்தினை ஒன்று சேர்த்து இன நல்லிணக்கத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதற்குக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை.

நாடாளுமன்றில் எதிர்கட்சியில் இருந்து கிங்மேக்கர்களாகத் தொழிற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதிய ஆளுநருக்கான நியமனத்தின் போது பின்வரும் கோரிக்கைகளில் ஒன்றை முன்வைத்திருக்க முடியும்.

1. மாகாணசபையின் முதலமைச்சர்களாக முஸ்லீம்கள்தான் இருந்தவர்கள் தற்போது தமிழர் ஒருவரை ஆளுநனராக நியமிப்பதுதான் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுக்கு முக்கியம் என்பதை வலியுறுத்துதல்.

2. வடக்கையும் கிழக்கையும் சம அந்தஸ்த்துடன் கூட்டமைப்பு நோக்கியிருக்குமானால் வடக்கிற்கு முஸ்லீமையும் கிழக்கிற்கு தமிழரையும் நியமித்து ஓர் இனச் சமன்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயன்றிருந்தால் இதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களை சமமான கண்ணோட்டத்தில் நடாத்துகிறோம் என்பதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

3. முதல் இரண்டும் சாத்தியமற்றுப் போனால் வடக்கில் எவ்வாறு வடக்கைச் சேர்ந்த தமிழரை நியமிக்கவில்லையோ அது போல் கிழக்கில் கிழக்கைச் சேர்ந்த முஸ்லீமை நியமிக்கக் கூடாது என்கின்ற ஒரு நீதியான கோரிக்கையைத்தானும் முன்வைத்திருக்க வேண்டும்.


இவை எதனையுமே செய்யாது வடகிழக்கு மாகாண சபைகளுக்கு தமிழ் பேசும் ஆளுநனர்கள் நியமிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியான விடயம் என்பது போல் நடந்து, ஒட்டுமொத்த கிழக்குத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை குழி தோண்டிப் புதைத்துள்ளார்கள்.

இதுபோன்றே பிரதமர் பதவி கவிழ்க்கப்பட்டு மீண்டும் பதவியேற்றதின் பின் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பிரதமர் வடக்குக்கான அமைச்சரைவையை பொறுப்பெடுத்துக் கொண்டார். இதன்போதும் கூட யுத்தத்தால் வடக்கு மட்டுமல்ல கிழக்கும்தான் பாதிக்கப்பட்டது. எனவே கிழக்கிற்கும் ஒரு அபிவிருத்தி அமைச்சை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையைத்தானும் தங்களால் பதவியில் அமர்த்தப்பட்ட பிரதமரிடம் முன்வைக்கமுடியவில்லை. கிழக்கிலிருந்து பல சமூகமட்ட அமைப்புக்கள் தனிநபர்கள் குரல் எழுப்பியபோதுதான் அது கிழக்கு அமைச்சாகவும் இருக்கும் என்று கூறினார்களே தவிர சட்டரீதியாக எதுவும் நடைபெறவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய அபிவிருத்தி, என முக்கிய அபிவிருத்திகள் தொடர்பாக அறிவித்திருக்கிறார். இச்சந்தர்ப்பத்தில் வடக்கையும் கிழக்கையும் இணைத்து தமிழ்த் தேசியம் பேசுகின்ற தமிழ்த் தலைமைகள் கிழக்கில் கைவிடப்பட்ட காகித ஆலை, ஓட்டுத்தொழிற்சாலை, சீனித்தொழிற்சாலை, பாரிய நெல்சந்தைப்படுத்தும் சபை போன்றவற்றை மீண்டும் இயக்குவதற்கான கோரிக்கையினை முன்வைப்பதற்கு விரும்பவில்லை.

இவ்வாறு கிழக்குத் தமிழர்களின் அரசியல் உரிமைகள், அபிவிருத்தி என எதனையும் கருத்தில் கொள்ளாமல் செயற்படும் ஒன்றுக்கும் உதவாத பிரதிநிதிகளை கிழக்குத் தமிழ்மக்கள் எதற்காகத் தெரிவு செய்து பாராளுமன்றத்தக்கு அனுப்பினார்கள் என்று கேட்பதில் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறு கிழக்கின் அபிவிருத்தியும் கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளும் எந்தவிதமான அசைவுமின்றி அப்படியே இருக்க, அனைத்து தமிழ் கட்சிகளும் மாகாணசபை, நாடாளுமன்றத் தேர்தல் எனும் தேர்தல்களுக்கான ஆயத்த வேலைகளை மிகக் காரசாரமாக முன்னெடுத்து வருகின்றன.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான வாக்குகளை தாம் பெற்று வீட்டுச் சின்னத்துக்கு சமனாக சூரியனை கொண்டுவந்துவிட வேண்டும் என்பது மாத்திரமே அதன் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி அவர்களின் ஒரே நோக்காக இருக்கின்றதே தவிர கிழக்குத் தமிழ் மக்கள் தொடர்பான அபிவிருத்தி, அரசியல் அபிலாசைகள் என்பவை பற்றி எவ்வித திட்டங்களும் அவர் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. கூட்டமைப்புக்கு மாற்றான அரசியல் கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணிதான் வரவேண்டும் என்ற அவருடைய நோக்குக் காரணமாக தனது கட்சியையே பொறுப்பேற்று நடாத்துமாறு முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் திரு. சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களிடம் கெஞ்சிக்கொண்டு திரியும் அரசியல் வங்குரோத்து நிலையிலே திரு. ஆனந்தசங்கரி அவர்கள் இருக்கின்றார்.

இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்கிய பொறுப்பிலிருந்தவரும் மட்டக்களப்பு மாநகரசபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமான திரு. சோமசுந்தரம் அவர்கள் எதிர்காலத் தேர்தலை த.வி.கூ. யில் இருந்து எதிர்கொள்வது தனது வெற்றிவாய்ப்புக்கு உரியதல்ல எனக் கருதி திரு.சி.வி. விக்கினேஸ்வரனுடைய கட்சியில் சோந்து பதவியினையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

திரு.ஞா.கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) அவர்கள் திரு.சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களை சந்தித்திருந்தாலும் அந்தக் கட்சியில் சேர்ந்து பதவி எதனையும் எடுக்காது மதில் மேல் பூனையாகவே இருக்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த அரசியல் தளம்பல் நிலையினை எவ்வாறு சீர்படுத்தி கட்சியை முன்கொண்டு செல்வது என்பதை கலந்துரையாடுவதற்காக கடந்தவாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரித்தானியக் கிளையின் இணைப்பாளர் திரு.அரவிந்தன் அவர்கள் களுவாஞ்சிகுடியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மாகாணசபை உறுப்பினருமான திரு.ஞா.கிருஸ்ணபிள்ளை அவர்களின் இல்லத்தில் கூட்டணியின் பட்டிருப்புத் தொகுதி முக்கியஸ்த்தர்களுடன் கலந்துரையாடியிருந்தார் என்பதனை அறியக் கூடியதாக இருக்கின்றது. இதனைத் தொடர்ந்து அக்கட்சியின் முக்கியஸ்த்தர்களுடனான கூட்டம் ஒன்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களின் காரியாலயத்தில் 24.02.2019 அன்று இடம்பெற்றுள்ளது.

திரு.சி.வி.விக்கினேஸ்வரனை தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் கூட்டணி எனும் கட்சியியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான அமைப்பு. இதுவே இம்முறை கிழக்கில் குறிப்பிடத்தக்க இடங்களைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கையில் உள்ளனர். கிழக்கின் பல முக்கியமானவர்கள் இக்கட்சியில் தேர்தலில் நிற்பதற்கான முயற்சியிலும் இறங்கியுள்ளதாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மிக நீண்ட கால இடைவெளிக்குப் பின் மட்டக்களப்பில் தங்கள் கட்சிக் காரியாலயம் 24.02.2019 அன்று அதன் தலைவர் திரு.த.சித்தார்த்தன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமது கட்சியை மட்டக்களப்பில் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

**எழுவான் வேலன்**

திரு.த.சிவநாதன் அவர்களும் திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்களும் 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்' எனும் அமைப்பினை சென்ற வருடம் ஆரம்பித்தனர். திரு.த.கோபாலகிருஸ்ணன் ஒரு வருடகாலமாக பல்வேறுகட்சிகளையும் சந்தித்து ஓரணியில் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இந்தநிலையில் திரு.த.சிவநாதன், திரு.த.கோபாலகிருஸ்ணனையும் அவருடன் சேர்ந்து பணியாற்றியவர்களையும் ஓரம்கட்டி தனது தலைவர் பதவியை பலப்படுத்தி மட்டக்களப்பு, அம்பாரை, திருகோணமலை என்று கூட்டங்களை நடாத்திக் கொண்டு வருகின்றார்.

தாங்கள் ஒரு அரசியல் கட்சியுமல்ல, வேட்பாளர்களாக தேர்தலில் நிற்கப்போவதுமில்லை எனக் கூறும் சிவநாதனும் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினரும் எவ்வழியில் கிழக்குத் தமிழ் மக்களின் இருப்பையும் அபிவிருத்தியையும் முன்னெடுக்கப்போகின்றோம் என எதுவும் கூறாது இலக்கற்ற பயணமாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

ஒட்டுமொத்த தமிழ் கட்சிகளினதும் அரசியல் செயற்பாட்டாளர்கள் எனக் கூறிக்கொள்வோர்களினதும் ஒரே நோக்கம் தமது கட்சி அரசியலையும் தமது சுயநல மேம்பாட்டையும் எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம் என்றிருக்கிறதே தவிர கிழக்கு மக்களின் அரசியல்,பொருளாதாரம், கல்வி, சமூக விருத்தி என்பதோ அவற்றுக்கான செயற்திட்டமோ இவர்களிடம் இல்லை என்பது தெட்டத்தெளிவான உண்மையாகும்.

எனவே கிழக்குத் தமிழ் மக்கள் இடைவெளிகளை நிரப்ப வரும் சடப்பொருள்களை மிகவும் புத்திசாலித்தனமாகக் கையாண்டு கடந்தகால அரசியல் வரலாற்றையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுத்து தேர்தலில் சரியான முடிவினை வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

# கோட்டீஸ்வரனுக்குக் கிடைக்காத வெற்றியும் சுமத்திரனுக்குக் கிடைத்த வெற்றியும்?

## கோட்டீஸ்வரனை அஞ்சலித்து சில கேள்விகள்

ஈழத்தமிழர்கள் மத்தியில் அரசியற் செயற்பாட்டாளர்களில் முன்னோடிகளில் ஒருவராக கருதப்படும் கோடீஸ்வரன் அண்மையில் கொழும்பில் உயிர் நீத்தார். அவருடைய பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மலர்ச்சாலைக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற அமைச்சர் மனோ கணேசன் அங்கே அரசியல் செயற்பாட்டாளர் எவரையும் காணவில்லை என்றும் நன்றி மாறாத தமிழ்ச் சமூகம் என்றும் ஒரு குறிப்பை முகநூலில் எழுதியிருந்தார். ஆனால் உடல் வைக்கப்பட்டிருந்த மலர்ச்சாலைக்கு மனோ கணேசன் பிந்தியே சென்றதாகவும் அவர் வருவதற்கு முன்னரே கோடீஸ்வரனை தெரிந்தவர்களும் மதிப்பவர்களும் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தி விட்டதாகவும் கூறப்படுகின்றது. அதன் பின்னர் அவர் உடல் அவருடைய இறுதி விருப்பப்படி அவருடைய தாய்ப்பட்டினமாகிய திருகோணமலையில் தகனம் செய்யப்பட்டது.

நோய்வாய்ப்பட்டு கொழும்பில் வசித்த கோடீஸ்வரன் ஏறக்குறைய 10 ஆண்டுகள் படுக்கை நோயாளியாக இருந்திருக்கிறார். இக்காலகட்டத்தில் அவரைப் பெரும்பாலான அரசியல் செயற்பாட்டாளர்கள் சென்று பார்க்கவில்லை எனத்தெரிகிறது. கோடீஸ்வரன் கொழும்பில் படுக்கை நோயாளியாக இருக்கிறார் என்பது பெரும்பாலான அரசியல் செயற்பாட்டாளருக்கு தெரியாது. அவர் உயிர்நீத்தபோதே அவர் கொழும்பில் வசித்திருக்கிறார் என்பது பெரும்பாலானருக்கு தெரியவந்தது. ஏறக்குறைய மறக்கப்பட்ட ஒரு வீரராக கடந்த சுமார் 10 ஆண்டுகளாக கோடீஸ்வரன் கொழும்பில் வாழ்ந்துள்ளார்.

அவரைப் போல் மற்றொரு முக்கிய ஆளுமையும் இறந்த போதே அவர் யாழ்ப்பாணத்தில் தான் வசித்துவந்தார் என்பது தெரியவந்தது. அவர்தான் பொறியியளாளர் மயில்வாகனம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர் புரிந்த தொழில் சார் சாதனை தொடர்பாக யாழ்ப்பாணத்தவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். ஆனால் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் அவர் யாழ்ப்பாணத்தில்தான் வசித்திருக்கிறார். அவரை எந்த ஒரு ஊடகமும் கண்டு கொள்ளவில்லை. பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் உரிய கௌரவத்தை வழங்கவில்லை. அவர் உயிர் நீத்த பொழுது அவருடைய துறையைச் சேர்ந்த சிங்களக் கல்விமான்கள் அவருக்கு அஞ்சலி செலுத்திய போதே அவர் யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் தமது இறுதிக்காலத்தை கழித்திருக்கின்றார் என்று தெரியவந்தது.

தமது மேதை ஆளுமைகளை தமிழ் சமூகம் ஏன் இப்படி மறந்து போய் விடுகின்றது? அவர்கள் இறக்கும் போதுதான் திடீரென்று விழித்தெழுந்து அஞ்சலி செலுத்துகிறது. இவ்வாறு தனது மேதை ஆளுமைகளை உயிருடன் இருக்கும் போது மறக்கும் ஒரு சமூகம் இறந்தவர்களை எவ்வளவு காலத்திற்கு நினைவு கூரும்?

கோடீஸ்வரன் ஏன் ஈழத்தமிழருக்கு முக்கியமான ஓராளுமை? ஏனெனில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக விட்டுக்கொடாது போராடிய ஒரு சட்டச் செயற்பாட்டாளர் அவராவார். தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அவர் அதை எதிர்த்து உயர் நீதிமன்றம் வரை சென்றார். அப்பொழுது அவர் ஒரு எழுதுவினைஞராக இருந்தார். ஓர் அரச ஊழியராக இருந்து கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக வழக்காடினார். அதனால் வரக் கூடிய பின் விளைவுகளை எதிர்க்கத் தயாராகக் காணப்பட்டார். இலங்கைத் தீவின் இனஒடுக்குமுறையின் தொடக்க வடிவங்களின் ஒன்றே தனிச்சிங்களச் சட்டமாகும். கோடீஸ்வரன் இச் சட்டத்தை எதிர்த்து வழக்காடினார். அவர் அப்போது பலமாக காணப்பட்ட அரச எழுதுவினைஞர் சங்கத்தின் ஸ்தாபகராக இருந்தார். தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். முதல் வெற்றியும் பெற்றார். ஆனால் அதற்கு எதிராக இலங்கை அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தது. அதில் வெற்றியையும் பெற்றது. கோடீஸ்வரன் அதனால் சோர்ந்து விடவில்லை. இலங்கைத் தீவு பிரித்தானியாவின் முடிக்குரிய நாடாக இருந்தது. எனவே கோடீஸ்வரன் லண்டன் பிறிவி கவுன்சிலில் மேல்முறையீடு செய்தார். இதில் வெற்றியும் பெற்றார்.

1970 இல் சிறீமாவோவின் கூட்டரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு வெற்றி பெற்றது. அப்பெரும்பான்மையை வைத்துக் கொண்டு புதிய குடியரசு யாப்பை வரைந்தது. 1972 மே 22 இல் இலங்கைத் தீவு குடியரசு ஆகியது. அதோடு பிறிவி கவுன்சில் வழங்கிய தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது. இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவு குடியரசாக மாறக் கோடீஸ்வரன் ஒரு காரணம் என்று முகநூலில் வேதநாயகம் தபேந்திரன் என்ற ஒரு சமூக விமர்சகர் எழுதியிருக்கிறார். கோடீஸ்வரன் பின் நாட்களில் திம்பு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார். Hot Spring எனப்படும் ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். அதன் பின் அவர் அரங்கிலிருந்து அனேகமாக மறைந்து விட்டார். கோடீஸ்வரனின் வழக்கானது தமிழ் மக்களுக்கு ஒரு செய்தியை உணர்த்தியது. உள்நாட்டு நீதி தமிழ் மக்களுக்கு பெரும்பாலும் கிடைப்பதில்லை. மாறாக நாட்டுக்கு வெளியில் இருந்து பிரயோகிக்கப்படும் அழுத்தங்களே கொழும்பில் இருக்கும் ஆட்சியாளர்களை அசைக்கும் என்பதே அது.

சில ஆண்டுகளுக்கு முன் கனடாவில் உரைநிகழ்த்திய சுமந்திரன் ஐ.நாவால் பரிந்துரைக்கப்பட்ட கலப்பு விசாரணை பொறிமுறையை ஆதரித்துப்

நிலாந்தன்

பேசும்போது பிறிவி கவுன்சிலை ஒரு முன்னுதாரணமாகக் காட்டுகிறார். உள்நாட்டு நீதிபரிபாலன கட்டமைப்பும் வெளிநாட்டு நீதிபதிகளும் இணைந்து செயற்பட முடியும் என்பதற்கு பிறிவி கவுன்சில் ஒரு முன்னுதாரணம் என்று அவர் அப்பேச்சில் கூறுகிறார். கலப்பு நீதிமன்றம் எனப்படுவது ஏற்கனவே இலங்கைத்தீவில் பிரயோகத்தில் இருந்த ஒன்றுதான் என்ற தொனிப்பட அவருடைய பேச்சு அமைந்திருந்தது. ஐ.நா. பரிந்துரைப்பதை போல பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்றினை இலங்கையில் உருவாக்கலாம் என்று அவர் அப்பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய பேச்சின் ஒரு பகுதி வருமாறு.... 'இறைமையுள்ள நாட்டிலே வெளிநாட்டு நீதிபதிகளை உபயோகிப்பது ஒன்றும் புதிதான விடயமல்ல. எங்களுடைய நாட்டுச் சட்டத்திலே இது ஏற்கனவே நடந்துள்ளது. எங்களுடைய சட்ட அமைப்பிலே, நீதித் துறையிலே அவர்களின் பங்களிப்பு வெகு காலமாக இருந்திருக்கிறது. ஆகையினாலே நாங்கள் ஒன்றும் புதிதாகக் கொண்டு வரவில்லை என்பதைச் சொல்லுவதற்காகவோ, என்னவோ அவர்கள் அந்தச் சொற்றொடர்களைப் பாவிக்க

தொடர்ச்சி... (பக்கம் -12 )

# கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 3)

### நகை வேலைகள்

அழகுக்கு அழகு சேர்க்கும் தங்க நகைகள் எல்லாத் தரப்பு மக்களாலும் விரும்பி அணியப்படும் ஆபரணங்களாகும். ஈரம்ப கால மக்கள் பழ விதைகள், களி மண் உருண்டைகளை ஆபரணங்களாகப் பயன்படுத்தினார்கள். அதன் பின் உலோகப் பயன்பாடு வந்ததும் வெள்ளி, தங்க ஆபரணங்களின் பயன்பாடும் அதிகரித்தன. தற்காலத்தில் தங்க ஆபரணங்களே பிரதானப்படுத்தப்படுகின்றன. இலங்கையின் கொழும்பிலுள்ள செட்டியார் தெரு பாரம்பரியதும், பெறுமதியான நகைகளுக்கு பிரசித்தி பெற்ற இடமாகும். அங்கு கூட வேலைப்பாடுகள் நிறைந்த, அழகிய நகைகளைச் செய்வதிலும். செய்து அனுப்புவதிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள போரதீவுப் பிரதேச நகைக் கைவினையாளர்கள் முக்கிய இடம்பெறுகின்றனர்

செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதும் நகை கைவினையாளர்கள் பொருத்தமான முகூர்த்த நேரத்திலேயே தமது வேலைகளைத் தொடங்குகின்றனர். குறிப்பாக திருமணத்திற்கான தாலி செய்ய ஆரம்பிப்பது மத சடங்குகளுடனேயாகும். தங்கக் கட்டிகள், சிலவேளைகளில் பழைய நகைகளும் உருக்கப்பட்டு உபகரணங்களின் உதவியுடன் கைகள் மூலமாகவும், இயந்திரங்கள் உதவியுடனும் ஆபரணங்கள் செய்யப்படுகின்றன.

இந்திய செல்வாக்கு மிக்கதாயே தற்போது இப்பிரதேசத்தில் ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. குறிப்பாக பாரம்பரியமான, தடிப்பான, நெருங்கிய



வேலைப்பாடுகளுடனமைந்த நகைகளேயே பிரதானமாக வடிவமைக்கின்றனர். எனினும் தற்போது வட இந்திய, வெளிநாட்டுப்பாணி அலங்காரங்களில் அமைந்த மெல்லிய நகைகளேயே நுகர்வோர் மற்றும் நகை வியாபாரிகள் விரும்பி கொள்வனவு செய்வதாக நகைக் கைவினைஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாரம்பரிய அலங்காரங்கள், கற்கள் பதித்தல் போன்றன நகை வடிவமைப்பில் முக்கிய அம்சங்களாகும். கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலிருந்தும் போரதீவுப் பிரதேசத்தையே நகை வேலைகளுக்காக நாடி வருவது இப்பிரதேச நகைக் கைவினைஞர்களின் செய்திறன், நேர்த்தி என்பவற்றைப் பறைசாற்றுகின்றது. மோதிரம், மாலை, அட்டியல், வளையல், ஒட்டியாணம், மெட்டி போன்ற நகைகள் இங்கு வடிவமைக்கப்படுகின்றன. பெரும்பாலும் இப்பிரதேசத்தில் பரம்பரையாக நகை வேலை செய்யப்படுகின்றது.

தற்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து நகை இறக்குமதி செய்தல், இயந்திரங்களினால் நகைகள் வடிவமைத்தல், போலி நகைகள் என்பன இப்பிரதேச நகைக் கைவினைஞர்கள் எதிர் நோக்கும் சவால்களாகும்

### மரச் செதுக்கல்

நவீன உலகின் தளபாடங்களாக உலோகங்கள், பிளாஸ்டிக், கண்ணாடி, லெதர் போன்றவை இருப்பினும் மரத்தளபாடங்களுக்கான

ஆ.யு. நூருல் அஸ்மாஹ்
கல்முனை

பெறுமதி குறையவில்லை. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான மக்கள் தளபாடங்களுக்கு மரத்தையே தெரிவு செய்கின்றனர். இதற்கும் இங்குள்ள காலநிலை, நீடித்த ஆயுள் என்பன அடிப்படையாக அமைகின்றன. கிழக்கு மாகாண மக்கள் வழமையாகவே அலங்கார அறிவில் உச்சமுடையவர்கள் என்பது இங்குள்ள மரத்தளபாடச் செதுக்கல்களில் காணலாம்.

கட்டில், அலங்காரக் கண்ணாடி மேசை, அலமாரி, கதிரை, கதவு, ஜன்னல், நிலைகள், கைப்பிடிகள், மேசை, சட்டகங்கள் என்பவற்றில் பாரம்பரியமானதும், மதரீதியான அலங்காரங்கள் செதுக்கப்படுகின்றன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தின் உட்பகுதிகளில் மரச் செதுக்கல் வேலைகள் இடம்பெறுகின்றன. முதிரை, தேக்கு, கல்லொளி போன்ற உறுதிமிக்க மரங்களை இலகுவாகப் பெறுவதும், நுண்ணிய அலங்கார அறிவு இப்பிரதேச மக்களுக்கு உள்ளதும் இதற்குக் காரணமாகும்.

வெட்டு அலங்காரங்கள், உட்பதித்த மற்றும் வெளித்தள்ளிய அலங்காரங்கள் , கடைசல் அலங்காரங்கள் என்பன மலர்க் கொடி, பறவை உருவங்கள், மிருக உருவங்கள், பாரம்பரிய காட்டுருக்கள் மற்றும் அலங்காரங்கள், தெய்வ உருக்கள் என்பன மிகவும் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் இப்பிரதேச கைவினையாளர்களால் செதுக்கப்படுகின்றன.

தரச் சிறப்பினாலும், செதுக்கல்

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# பட்டறிவு


## 1800களில் இலங்கை: காலனித்துவ நூல்கள் வழியாக

இந்தப் பத்தி 1800களில் (19வது நூற்றாண்டில்) இலங்கை பற்றிய அரிதான விபரங்களை வெளிப்படுத்திய காலனித்துவக் கால வெளியீடுகள் அறிக்கைகள் என்பவற்றை ஒவ்வொன்றாக அறிமுகம் செய்து வைப்பதற்காக தொடங்கப்படுகிறது. இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார, வரலாற்று விடயங்களை ஆராய்பவர்களுக்கு உதவும் ஒரு வழிகாட்டி உசாத்துணையாக பதிவு செய்வதற்கும், கூடவே அவை வெளியிட்ட முக்கிய விபரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவுமே இந்தப் பத்தி சில வாரங்களுக்குத் தொடரும்.

காலனித்துவ கால இலங்கை பற்றிய குறிப்புகளை ஆராய்பவர்களுக்கு உதவும் பல்வேறு முக்கிய ஆவணங்களின் வரிசையில் “இலங்கை நாட்காட்டி” (The Ceylon Calendar - almanac for the year OF OUR LORD «....»), “பெர்குசன் டிரக்டரி” (The Ceylon Almanac and Ferguson's Directory) ஆகிய இரண்டும் முக்கியமானவை. இவை இரண்டுமே ஆண்டுதோறும் அன்றைய அரசாங்க அச்சகத்தினால் வெளியிடப்பட்டு வந்த பல நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட பெரிய அறிக்கைகள். இவற்றை இன்று காண்பதும் தேடிக்கண்டுபிடிப்பதும் லேசான வேலையல்ல. இலங்கையின் சுவடிகூடத்திணைக்களத்திலும், நூதனசாலை நூலகத்திலும் இன்னும் சில பழைய நூல் சேகரிப்பு இடங்களில் மாத்திரமே காணக்கிடைக்கக்கூடியவை.

இலங்கையின் தொகைமதிப்பு புள்ளிவிபர சேகரிப்பும், வெளியீடும் 1871 இலேயே ஆரம்பித்துவிட்டன. அதேவேளை 1944 டிசம்பர் மாதம் தான் டொனமூர் அரசியல் திட்டம் அமுலில் இருந்த காலத்தில் இலங்கை குடிசன மதிப்பீட்டு திணைக்களம் (Census Department) ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதுவரை இலங்கையின் மக்கள், சமூகம், வர்த்தகம், விவசாயம், மருத்துவம், வரலாற்றுக் குறிப்பு, நாட்டின் மொத்த வரவு செலவு என அத்தனையையும் துல்லியமாக பல நூற்றுக்கணக்கான பக்கங்கங்களில் பல வருடங்களாக தந்தவர் தான் பெர்கியுசன்.

“The Ceylon Calendar - almanac for the year ” என்பதை இலங்கையின் பஞ்சாங்க நாட்காட்டி என்று அழைக்கலாம். ஆனால் அது ராசிபலன்களை அறிவிக்கும் வைதீக அர்த்தத்திலல்ல. மிகவும் விஞ்ஞானபூர்வமான ஏராளமான நடைமுறைத் தகவல்களைக் கொண்டிருப்பது இது. வருடாந்தம் இந்தத் தகவல்கள் கிரமமாக



THE

CEYLON CALENDAR

FOR THE

Year of Our Lord

1827.


COLOMBO

PRINTED AT THE GOVERNMENT PRESS
BY NICHOLAS BERGMAN.

புதுப்பிக்கப்பட்டுவந்ததால் ஆரம்பத்தில் இதனை தொகுப்பதற்கு கொடுக்கப்பட்ட விலை அதற்குப் பிறகு அந்தளவு தேவைப்பட்டிருக்காது.

முக்கியமான வரலாற்றுக் குறிப்புகள், ஆட்சியாளர்கள், அதிகாரிகள், குடித்தொகை புள்ளிவிபரங்கள், அரச நீதி, நிர்வாகத்துறைகள் மட்டுமன்றி பொது விடுமுறை நாட்கள், பௌர்ணமி நாட்கள், பிறப்பு, இறப்பு, திருமணம் பற்றிய விபரங்களைக் கூட காணக் கிடைக்கின்றன. ஆங்கிலேயர்கள் இலங்கையை 1818இல் தான் முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள். ஆனால் 1833இல் தான் இலங்கையை ஆட்சி செலுத்துவதற்கான முதலாவது அரசியல் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள்.

“இலங்கை பஞ்சாங்க நாட்காட்டியை” அவர்கள் அதற்கு முன்னரே வெளியிட்டுவிட்டார்கள் என்று தெரிகிறது. எனது சேகரிப்பில் ஒரு சில உள்ளன அதில் பழமையானது 1827 ஆம் ஆண்டு வெளிவந்தது. எனவே இது எப்போது முதன் முறை வெளியிடப்பட்டது என்று அறியக்கிடைக்கவில்லை. 1827ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கை 327 பக்கங்களைக் கொண்டிருக்கிறது.



5. The Student should be required to translate from two or three of the following works:

*In Singhalese.*—The Bala Prabbodena.
Histories published by the School Commission.
The Singhalese Regulations of Government.
The Dampiyawa—translated from the Pali.
The Pansiye Panas Jateka
The Tupawansa
The Rajawallea.

*In Tamil.*—The Neethe Venpa
The Koral.
The Thesavaleme or Country Law of Jaffna.
Simon Casie Chitty's Tamil Version of Turnour's Epitome of the History of Ceylon.
The Calladakam
The Government Ordinances.
The Kambaramayanum.
The Baratham.

ஆங்கிலேயர்கள் இலங்கைக்குள் வந்ததன் பின்னர் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளை நினைவுபடுத்தும் நாட்குறிப்பும் 12 மாதங்களிலும் குறிப்பிடப்படுகின்றன. நாளாந்த சூரிய உதயம், அஸ்தமனம் சந்திர உதயம், அஸ்தமனம் என்பவை பற்றிய கால அட்டவணையும் அடங்குகிறது. இலங்கையில் தரித்துநிற்கும் கப்பல்கள், போர்க்கப்பல்களின் விபரங்கள், அவற்றின் கப்டன்கள், கப்பலில் அடங்கியுள்ள பீரங்கிகளின் எண்ணிக்கை என்பவை கூட பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து கப்பல்கள் மூலமும் தோணிகள் மூலமும் இலங்கைக்கு கொண்டுரவரப்படும் பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வை வரி பற்றிய நீண்ட பட்டியல் ஒன்றும் உள்ளது. சாராயம் என்பவற்றுடன் கஞ்சாவுக்கும் தீர்வை விதித்திருப்பதன் மூலம் ஆங்கிலேய ஆட்சியில் கஞ்சா அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்திருப்பதும் தெரிகிறது.

இலங்கையில் அப்போது இயங்கிய மிஷனரி அமைப்புகள் அவை நடத்திய பாடசாலைகளின் எண்ணிக்கை, அவை கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி பிரதேச வாரியாக பட்டியலிட்டிருக்கிறார்கள்.

85ஆம் பக்கத்தில் காலனித்துவ அடிமைகளை (Registy of Colonial Slaves) பதிவு செய்யும் காரியாலயம் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.

தூரப் பயணங்கள் மேற்கொள்கையில் தாண்ட வேண்டிய பிரதேசங்கள், அந்தந்த பிரதேசங்களை அடைவதற்கு எடுக்கும் மைல் தூரம், இடையில் தங்கக் கூடிய வாய்ப்புள்ள இடங்கள் அவற்றுக்கு உள்ள தூரம் என்பன பற்றிய விபரமான நீண்ட பட்டியல் சில பக்கங்களை நிறைத்துள்ளன. உதாரணத்துக்கு கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தம்புள்ளை, மிஹிந்தலை வழியாக செல்லும் வழியில் உள்ள இடங்களில் தங்குமிடங்களாக கூலிக் கொட்டகைகள் (Cooly shed), தங்குவிடுதிகள் பற்றிய விபரங்களும் எதிர்கொள்ளக்கூடிய ஆறுகள், பாலங்கள், நெல்வயல்கள், மிஷனரி நிலையம், பொலிஸ் நிலையம், எல்லைகள், துறைமுகங்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

மாட்டு வண்டில்களுக்கும் அவற்றை ஓட்டும் கூலிகளுக்குமான வரிகள், சட்ட விதிகள் பற்றி இரு பக்கங்களில் சில விபரங்கள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு கூலிக்கு ஒரு நாள் சம்பளம் 6 பென்னி
கொழும்பு – மாத்தறை கூலி – 6 சில்லிங்கள்
கொழும்பு - மட்டக்களப்பு – ஒரு பவுன், 4 சில்லிங்கள் கொழும்பு – யாழ்ப்பாணம் – 18 சில்லிங்கள்

விதிகளில் சில..
40 இறாத்தல் பொதிக்கு மேல் எந்தவொரு கூலியும் எற்றிச்செல்லக் கூடாது.
கூலிகளின் வேலை நேரம் காலை 7 – மாலை 5.30 வரை. இரண்டு மணித்தியால உணவுநேர ஒய்வுண்டு
சகல மாட்டு வண்டில்களுக்கும் இலக்கத்தகடு இருக்கவேண்டும்.
முறைப்பாடுகள், அல்லது மேலதிக உரிய கொடுப்பனவுக்கு மேல் கேட்கும் கூலிகள் தண்டிக்கப்படுவார்கள்.

இங்கிலாந்தின் பணம்தான் இலங்கையிலும் புழக்கத்தில் இருந்தது. 1971ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை பிரித்தானிய பணம் 12 பென்னிகள் = 1 சில்லிங் 20 சில்லிங் 1 பவுன் அதாவது 1 பவுன் 240 பென்னிகள் இந்த விதிகள் உருவாக்கப்பட்ட ஆண்டு 1800 என்று காணப்படுகிறது. அதாவது கண்டியைக் கைப்பற்றி இலங்கை முழுமையும் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கு முன்னர்.
1856 இல் வெளியான பதிப்பில் 110வது பக்கத்திலிருந்து தேசாதிபதி சுதேச மொழிப் பரீட்சை பற்றி வெளியிட்ட குறிப்புகளை காணமுடிந்தது. சுதேச மொழிகளைக் கற்றுக்கொண்ட ஆங்கிலேயர்களுக்கு அப்போது பதவிகளும், பதவி உயர்வுகளும், சம்பள உயர்வுகளும் வழங்கப்படும் வழக்கம் இருந்ததால் அதை ஊக்குவிக்கும்வகையில் இந்தப் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டதை அறிய முடிகிறது. இந்தளவு கடினமான ஒரு மொழிப் பரீட்சை வேற்று மொழிக் காரர்களுக்காக அன்று இருந்திருக்கிறது என்பது வியப்பைத் தருகிறது.

**என்.சரவணன்**

கீழ்வரும் இரண்டு அல்லது மூன்று நூல்களை மாணவர்கள் மொழிபெயர்த்திருக்கவேண்டும். ஓலைச்சுவடிகள் பரீட்சையாளரால் வழங்கப்படும். அவை சீல் செய்யப்பட்டு காலனித்துவ செயலாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

சிங்களத்தில் இருந்து:

பால பிரபோதன பாடசாலை ஆணையகத்தால் பிரசுரிக்கப்பட்ட வரலாற்று நூல்கள் சிங்களச் சட்டம் பாலியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட தம்ப்பியாவ பன்சிய பனஸ் ஜாதக தூபவன்ச ராஜாவலிய



THE

SIDATH SANGARAWA

A Grammar of the

SINHALESE LANGUAGE

Translated into English,

with

INTRODUCTION, NOTES, AND APPENDICES.

by

JAMES DE ALWIS,

Member of the Ceylon Branch of The Royal Asiatic Society.

"Omnes artes, quae ad humanitatem pertinent, habent quoddam commune vinculum, et quasi cognatione quadam inter se continentur"
—Cicero

COLOMBO:
WILLIAM SKEEN, GOVERNMENT PRINTER, CEYLON.

MDCCCLII

தமிழில் இருந்து:
நீதிவெண்பா
திருக்குறள்
தேசவழமைசட்டம்
சைமன் காசிச்செட்டியின் இலங்கை வரலாறு
கல்லாடகம்
அரசாங்க சட்டங்கள்
கம்பராமாயணம்
மகாபாரதம்

இந்த பரீட்சை பற்றிய விபரங்கள் அன்றைய ஆளுனரால் உத்தியோகபூர்வ அரச வெளியீடுகளினூடாக அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும். ஜேம்ஸ் 1852 ஆம் ஆண்டு வெளியிட்ட “The sidath sangarawa” என்கிற சிங்கள இலக்கணம் பற்றிய ஆய்வு நூலிலும் மேலதிக அடிக்குறிப்புகளோடு இந்த அறிக்கையைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.

சிவில் சேவைக்கான இந்த மொழிப் பரீட்சை ஆண்டுதோறும் இரண்டு தடவைகள் ஜனவரி, யூலை ஆகிய மாதங்களில் இடம்பெற்றிருக்கிறது.

32ஆம் பக்கத்தில் லெயார்ட் (Layard) என்பவர் சந்தித்த வெவ்வேறு 35 சாதியினர் பற்றிய பட்டியல் காணப்படுகிறது. சிங்களம், தமிழ் சமூகங்களை கலந்து பட்டியலிடப்பட்டிருக்கிறது.

காலனித்துவ காலத்தில் முதலீட்டாளர்களைக் கவர்வதற்காகவும், ஏற்கனவே இருக்கும் முதலீட்டாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் என்போருக்கு துல்லியமான தகவல்களையும், தரவுகளையும் வழங்குவதற்கான வழிகாட்டியாக இந்த வெளியீடு பெரிதும் பயன்பட்டன.

# குடிநோயாளர்களின் ஒரு தேவதை : செல்விகா சகாதேவன்



சமகாலத்தில் பெண்கள் எதையும் சாதித்துக் காட்டும் ஆர்வத்துடனும் துணிச்சலுடனும் செயல்பட ஆரம்பித்து விட்டனர். அந்த வகையில் எவருமே கையில் எடுக்கச் சிந்திக்கும் ஒரு விடயம் குடிப்பழக்கம் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சந்திப்பதும் அவர்களுடன் பேசுவதும். ஆனால் அப்படிப்பட்டவர்களை சந்தித்துப் பேசி, குணப்படுத்தி அவர்களையும் இவ்வுலகில் வாழத் தகுதியானவர்களாக மாற்றிக் கொண்டிருந்த ஒரு தேவதையை சந்தித்தோம். அவரின் சேவையையும் வெற்றியையும் பாராட்டும் முகமாக UN அமைப்பினால் கடந்த 20.02.2019 ஆம் திகதி "தன்னார்வத் தொண்டர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார் திருமதி .செல்விகா சகாதேவன்.

அகில இலங்கை ரீதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த "விமோசனா" இல்ல நிர்வாகியான செல்விகா அவர்கள் மாத்திரமே விருதினைப் பெற்றுக் கொண்ட ஒரே பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரை வாழ்த்தி அவரது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டோம்.

### தன்னைப் பற்றி.......

நான் ஒரு பட்டதாரியாக இருந்த போதும் அரசாங்க உத்தியோகத்தை விரும்பவில்லை. அதேவேளை TDH, சமுத்தான போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

### விமோசனா இல்லம் உருவான விதம்...

சுனாமிக்குப் பின்னர் இலங்கையின் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்த கனடாவைச் சேர்ந்த ஜோர்டன் கோத் என்பவர் மக்களின் தேவையை கருத்தில் கொண்டு கிணறுகள் மலசலகூடங்கள் என்பவற்றை அமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அதேசமயம் அவரது சிந்தனையில் பட்ட ஒரு விடயமாக குடி நோயாளர்களுக்கு ஏற்ற ஒரு இடத்தின் தேவைப்பாடு இருந்தது. அவர் இது குறித்து ஐந்து வருடங்களாக பேசிக் கொண்டிருந்தாலும் அவ்விடயம் குறித்து யாரும் அக்கறை காட்டாது இருந்தனர். இறுதியில் ஒரு பாதிரியார் ஊடாக அவர் என்னை சந்தித்து, தன் எண்ணத்தை தெளிவுபடுத்தினார். உடனடியாக சம்மதித்த நான் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்தி விமோசனா இல்லம் எனப் பெயரிட்டு நடத்த தலைப்பட்டேன். 2011இல் ஆரம்பித்த இவ்வில்லம் தற்போது 8 வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

### சந்தித்த சவால்கள்....

ஒரு பெண்ணாக நான் இந்தச் சேவையைச் செய்யும் போது எனது குடும்பத்திலும் சரி என்னைச் சுற்றிய சமூகத்திலும் சரி பல சிக்கல்கள் இருந்தன என்பது உண்மையே.

தனியாக பல இடங்களுக்குச் சென்று குடி நோயாளர்களை சந்தித்துப் பேசுவது, இல்லத்துக்கு வரும் நோயாளர்களுடன் பேசுவது எல்லாமே சவாலான விடயம் தான். அதையெல்லாம் தகர்த்தெறிந்து எனது குடும்பத்தினருக்கு எனது சேவையின் மகத்துவத்தையும் தேவையையும் புரிய வைத்து இன்றுவரை அவர்களின் ஆதரவுடன் தான் முன்னேறிச் செல்கிறேன்.

### இல்ல செயற்பாடுகள் குறித்து.....

இங்கு வரும் குடி நோயாளர்கள் அனேகமாக நீதிமன்றங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் தனிப்பட்ட முறையில் என பல வழிகளில் வருகிறார்கள். அவர்களுக்கு நாம் 42 நாட்கள் சிகிச்சை அளிக்கிறோம். இங்கு வழங்கப்படும் சிகிச்சையானது மருந்துகள் இன்றி தியானம், யோகாசனம் மற்றும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் மூலமாகவே வழங்கப்படுகிறது. இவை தவிர வெளி இடங்களிலும் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் போன்றவற்றிலும் விழிப்புணர்வுக் கூட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

**நிலாந்தி சசிகுமார்**

### விருதுகள்.....

சமாதான நீதவான், தேச கீர்த்தி மற்றும் தற்போது வழங்கப்பட்ட தன்னார்வத் தொண்டர் போன்ற விருதுகள் கிடைத்துள்ளன. விருதுகளுக்காகவோ அல்லது ஊதியத்திற்காகவோ நான் இச் சேவையை செய்யவில்லை. என் மனத்திருப்திக்காகவும் சேவை அடிப்படையிலும் செய்யும் தொழிலை விரும்பிச் செய்தமைக்காகவுமே இவ்விருதுகள் என்னை வந்தடைந்ததாக நினைக்கிறேன். அதே சமயம் இவ்விருதுகள் கிடைப்பதற்கு தனி ஒரு பெண்ணாக நான் முயற்சித்தாலும் எனக்கு உறுதுணையாக எனது குடும்பத்தினர் மற்றும் இல்லத்தில் கடமையாற்றும் தொண்டர்கள் அனைவருமே காரணம் என்பதால் அனைவருக்கும் இவ்விருது சமர்ப்பணம்.

அதேசமயம் விருது கிடைத்த பிற்பாடு மேலும் பல திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்துள்ளது.

### தற்போதைய சிக்கல்கள்....

தற்போது உள்ள எமது இல்லமானது ஒரு சிறிய இடத்தில் தான் இயங்கி வருகின்றது. அதனால் ஒரே சமயத்தில் 12 குடி நோயாளர்களை மட்டுமே உள் வாங்கக்கூடியதாக உள்ளது. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை குடி நோயாளருக்கான நிலையமாக எமது விமோசனா மட்டுமே உள்ள நிலையில் குடி நோயாளர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள மாவட்டமாக மட்டக்களப்பும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே இடப்பற்றாக்குறை எமக்குள்ள முக்கியமான சிக்கல். அதனை நிவர்த்தி செய்யும் போது பல குடி நோயாளர்களை ஒரே சமயத்தில் குணப்படுத்த முடிவதுடன் குடிப்பழக்கம் குறைந்த மாவட்டமாக எமது மட்டக்களப்பை கொண்டு வர முடியும் என்பதையும் உறுதியாகக் கூறமுடியும்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மூதாதையரின் காலடிகள்

## ஈச்சலம்பற்று

ஈச்சலம்பற்று கொட்டியாரப் பிரதேசத்தின் மிகப் பழமையான கிராமங்களில் ஒன்று, சோழ மன்னன் எல்லாளன் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதை காலம் காலமாய் தொடரும் கர்ண பரம்பரை கதைகள் நிருபிக்கின்றன. ஈழத் தமிழர் வரலாற்று தடத்தில் அதன் தொல்லியல் சான்றுகள் நிருபித்து நிற்கின்றன.

ஈழத் துறை எனும் இலங்கைத்துறை முகத்துவாரத்தில் தன் படைகளுடன் வந்து இறங்கிய எல்லாளன், ஈச்சலம்பற்று வழியாகவே அனுராதபுரம் சென்றான் என ஒரு வரலாற்று தகவல் கூறுகிறது.

பற்று என்ற சொல் ஈழத்தில் தமிழ் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட ஆட்சிப் பிரதேசத்தை குறிக்கும் பெயராய் இன்று வரை தொடர்வதைக் காணலாம்.

ஈச்சலம்பற்று ஒரு காலத்தில் ஒரு குறு நில அரசாய் இருந்திருப்பதற்கான சான்றுகள் நிறையவே காணப்படுகின்றன.

ஈழத்தின் ஆதிக் குடிகளோடு தொடர்புபட்ட வெருகல், அதன் தொல்லியல் சான்றுகள் இப் பிரதேசத்தையும் ஊடறுத்து செல்வதை தவிர்க்க முடியாது. இன்னமும் வாசிக்கப் படாத கல்வெட்டுகள் இங்குள்ள காட்டுப் பகுதிகளில் காணப் படுகின்றன. பல கட்டிட இடிபாடுகளும் சரியான முறையில் தொல்லியலாளர்களால் ஆய்வு



செய்யப்படும் போது நம் மூதாதையரின் காலடிகள் மேலும் நம் வரலாற்றுக்கு வலுச் சேர்க்க முடியும்.

வெருகல் கோயில் வரலாற்றுடன் ஈச்சலம்பற்று நெருங்கிய தொடர்பு கொண்டது. குளக்கோட்டன் காலத்தில் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட சிந்து நாட்டார் இங்குதான் குடியிருத்தப்பட்டதாக சொல்லப்படுவதும் பரம்பரை பரம்பரையாக சிந்து நாட்டாரின் அனுசரணையிலேயே வெருகல் கோயில் அதன் நிர்வாகம் இருந்ததாகவும் வரலாற்று குறிப்புகளும் வளமைகளும் நிருபிக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து பாத யாத்திரையாய் கதிர்காமம் செல்வோர் ஈச்சலம்பற்றை தரிசிக்காமல் சென்று விட முடியாது.

செண்பகநாச்சி அல்லது செம்பொன்னாச்சி என அழைக்கப் படும் அம்மனோடு தொடர்புபட்ட வரலாறு ஈச்சலம்பற்றின் வரலாற்றின் தொடர்ச்சியில் மும்முடிச் சோழ மண்டலத்துடன் தொடர்பு பட்டு நிற்கிறது. திருகோணமலையின் காவல் தெய்வங்களில் ஒன்றாய் பார்க்கப்படுவதும் இங்கு மனங் கொள்ளத் தக்கது.

சோழர்கால சிற்ப மரபுடன் தொடர்பு பட்டதாய் காணப் படுகிறது. இதே பாணியிலான சிலைகளை தஞ்சாவூர், காஞ்சிபுரம் என பல இடங்களிலும் காணலாம் .

இன்று செண்பகநாச்சி அம்மன் கோயிலில் அம்மன் சிலை அருகே சிவலிங்கங்களும் வைத்து வழிபடப்படுகின்றன. அந்த சிவலிங்கங்கள் ஈச்சலம் பற்று காட்டு பிரதேசங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக அறிய முடிகிறது. ராஜேந்திர சோழன் கால கட்டத்தில் இங்கு கொட்டியாரத்தில் பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று ஈச்சலம்பற்று பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த சிவலிங்கங்களே இங்கு உள்ளது போல் தெரிகிறது.

**பாலசுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

கடந்த காலத்தில் யுத்த சூழ்நிலையில் இடம் பெயர்ந்த ஊர் மக்கள் மீண்டும் வந்து மீளக் குடியேறிய போது, வீடு கட்டுவதற்காக நிலத்தை தோண்டிய போது ஆயிரம் வருசங்களுக்கு முந்திய கிணறும் கட்டிட கருங்கல் தூண்களும் கண்டுபிடிக்கப் பட்டமை இக் கிராமத்தின் பழமையை மேலும் தெளிவுபடுத்துகிறது.

இயற்கை வளமும் வரலாற்று தொன்மையும் கொண்ட ஈச்சலம்பற்று ஈழத் தமிழர் வரலாற்றில் நம் மூதாரையரின் காலடிகளை சுமந்து நிற்கிறது.


அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்
பதுளை வீதி – புலையவெளி
03ம் மாத விசேட பூசைகள்
04-03-2019 மகாசிவராத்திரி விரதம் திங்கட் கிழமை
06-03-2019 அமாவாசை விரதம் புதன் கிழமை
10-03-2019 சதுர்த்தி விரதம் ஞாயிற்றுக் கிழமை
12-03-2019 சஷ்டி விரதம் செவ்வாய்க் கிழமை
17-03-2019 ஏகாதசி விரதம் ஞாயிற்றுக் கிழமை
18-03-2019 பிரதோச விரதம் திங்கட் கிழமை
20-03-2019 பூரணை விரதம் புதன் கிழமை
21-03-2019 பங்குனி உத்திரம் வியாழக் கிழமை
24-03-2019 சங்கடகர சதுர்த்தி விரதம் ஞாயிற்றுக் கிழமை
உபயங்களை செய்ய விரும்புவர்கள் எம்மை தொடர்பு கொள்ளவும்
தொடர்புகளுக்கு:- 0771516203
(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)



NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Are you 18+ and have GCSEs or work experience?
Do you have A levels but missed your place at university?
Foundation Degree Business (London Metropolitan University)
Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
HND Business (Pearson)
HND Hospitality Management (Pearson)
BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# மட்டு மாநகரசபை

## உள்ளூராட்சி மன்றங்களில் வருமான வழிமுறைகள்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பினுள் வருமானங்களை ஈட்டி, அந்த வருமானத்தின் மூலம் நிதியைச் சேகரித்து மக்களுக்கு சேவைகளை வழங்கிவருகின்றன. இவ்வாறு வருமானங்களை ஈட்டுகிறபோது



சட்டரீதியான ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டே நிதியைச் சேகரிக்க வேண்டும். இந்தவகையில் உள்ளூராட்சி மன்றங்கள் வருமானம் பெறும் பிரதான வழிமுறைகளாக பின்வரும் வழிமுறைகளைக் குறிப்பிடலாம். அவற்றை பொதுமக்களாகிய நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிதி மூலங்களில் மிகமுக்கியமானது ஆதனவரியாகும். அந்த விடயம் தொடர்பாக கடந்த வாரம் 'ஆதன வரி செலுத்துவோம்' எனும் தலைப்பில் நாம் ஆராய்ந்தோம். அதனை மீட்டுப்பாருங்கள். மேலும் பல வழிமுறைகளில் வருமானங்களை ஈட்டமுடியும். அவற்றைச் சுருக்கமாக அறிவோம்.

### முத்திரைக் கட்டணம்




முத்திரைக் கட்டணம் என்பது, நாம் ஏதோ ஒரு வகையில் அரசுக்கு முத்திரையாக செலுத்தும் கட்டணமாகும். குறிப்பாக காணிக் கொள்வனவின்போது உறுதியெழுத முத்திரைக் கட்டணம் செலுத்துகிறோம். அந்த முத்திரைக் கட்டணங்கள்யாவும் நமது உள்ளூராட்சி மன்றத்திற்குக் கிடைக்கின்றது. நாம் காணியின் உண்மையான பெறுமதியிலும் பார்க்க குறைவான பெறுமதியான முத்திரை செலுத்துவதனால் உள்ளூராட்சி பெற வேண்டிய நிதி இழக்கப்படுகின்றது. நாம் ஒவ்வொருவரும் முத்திரைகளை சரியானமுறையில் குறைக்காமல் செலுத்துவோமாயின் அந்த நிதி முழுமையாக நமது உள்ளூராட்சி மன்றத்திற்குப் போய்ச்சேரும். அதன்மூலம் நாம் அதிகம் பயன்பெறலாம்.

### நீதிமன்ற அபராதங்கள்

நம்மில் சிலர் ஏதோ காரணத்தினால் நீதிமன்றத்துக்குச் சென்று அங்கு அபராதங்களைச் செலுத்துகிறபோது, அந்த அபராதங்கள் யாவும் நமது உள்ளூராட்சி மன்றங்களுக்கே கிடைக்கின்றன. நாம் இடைநடுவில் கையூட்டுக்களைச் செய்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு வரவேண்டிய நிதியை மாற்று வழியில் திருப்பி விடக்கூடாது. நீதியாகவும் நேர்மையாகவும் நீதிமன்றங்களில் நாம் செலுத்துகிற அபராதங்கள் யாவும் நமக்கே வருகிறது என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

### வாடகைகள் மற்றும் குத்தகைகள்

பொதுச் சந்தைகள், கடைத் தொகுதிகள், பொது மண்டபங்கள் என்பன வாடகைக்கு விடப்படுகின்றன அல்லது குத்தகைக்கு வழங்கப்படுகின்றன. உரிய முறையில் சமகாலப் பெறுமதிக்கு ஏற்ப கடைகளை வியாபாரிகள் பெற்று, அந்த வாடகைக் கட்டணங்களை முறையாகச் செலுத்த வேண்டும். அதன் மூலம் பராமரிப்பு தொடர்பான சேவைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.



### வாகனத் தரிப்பிடங்கள்

மக்களின் வசதிக்காக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் அதன் எல்லை பிரதேசத்தில் பொதுமக்களின் நலன் கருதி முன்கூட்டியே வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்ட இடங்களில் வாகனத் தரிப்பிடங்களை அமைத்துள்ளன. இந்தத் தரிப்பிடங்களில் நமது வாகனங்களை கட்டணம் செலுத்தி நிறுத்துவது சட்டரீதியான ஏற்பாடாகும். எனவே நாம் வாகனத் தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்துவோம். அந்த வரிப்பணம் மூலம் வாகன தரிப்பிட வசதிகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

### வியாபார வரி

வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆண்டுதோறும் உரிமம் பெறவேண்டியது அவசியமாகும். அத்துடன் பெயர்ப்பலகைகள் யாவற்றுக்கும் கட்டணம் செலுத்த வேண்டும். இதன்மூலம் வியாபார நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் சேவைகளை விரிவாக்கிக் கொள்ளமுடியும். எனவே வர்த்தக நிலையங்கள் ஒவ்வொன்றும் அதாவது சிறுகடை முதல் பெரிய வாணிப நிலையங்கள் வரை வரி செலுத்த வேண்டும்.

### கழிவுகளை அகற்றுதல்

நமது மலக்குழிகள் மற்றும் சமையலறைக் கழிவுநீர்த்தொட்டி நிறைந்தால் அதனை அகற்றுவதற்கு நாம் கட்டணம் செலுத்தி பவுசர்கள் மூலம் அகற்றவேண்டும்.



### சேமக்காலைகளில் கட்டிடங்களை கட்டுதல்

சேமக்காலைகளில் கட்டிடங்களை கட்டுவதற்கு நாம் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அக்கட்டணம் மூலம் வருமானத்தைப்பெற்று சேமக்காலைகளைப் பராமரிக்க முடியும்.

### களியாட்ட வரி

சினிமாப் படமாளிகைகள், களியாட்ட விழாக்களின் பெறப்படும் டிக்கட் கட்டணத்தில் கணிசமான தொகை உள்ளூராட்சி மன்றத்திற்கு செல்கிறது.

### முறைப்படுத்தப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்கள்

கட்டிட அனுமதிபெறல், காணிகளைப் பிரிவிடுதல், உரிமைச் சான்றிதழ் பெறுதல், வீதி ரேகைச் சான்றிதழ் பெறுதல் போன்ற முறைப்படுத்தப்பட்ட சேவைகளுக்காக நாம் செலுத்தும் கட்டணங்கள்யாவும் உள்ளூராட்சி மன்றத்தின் நிதியத்தில் சேர்ந்து அதன்மூலம் நாம் சேவைகளைப்பெற முடியும்.

இன்னும் பல வழிமுறைகளில் உள்ளூராட்சி மன்றங்கள் வருமானங்களைப் பெறமுடியும். அதனை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அறிந்து வருமான மூலங்களை உருவாக்க வேண்டும். அவ்வாறே பொது மக்களாகிய நாம் நமக்குரிய வரி மற்றும் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்துவோமாயின் நமது உள்ளூராட்சி மன்றங்கள் நமக்கான சேவைகளை தங்கு தடையின்றி வழங்க முடியும்.

## 3 வது குழந்தைக்கு மாதாந்தம் ஐயாயிரம் வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்'

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடும்பங்களில் மூன்றாவது குழந்தையாக பிறக்கின்ற குழந்தைகளுக்கு மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதாயின் 01.01.2019 ஆம் திகதிக்கு பின்னர் பிறந்த மூன்றாவது குழந்தையின் விபரங்களை மாநகர சபையின் பிரதி முதல்வரின் ஊடாக வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்து, கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் குடும்பநல வைத்திய அதிகாரியின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் குடும்பங்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும் என மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையினால் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற சிறுவர்களின் போசாக்கை அதிகரித்தல், மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை மேம்படுத்தல் போன்றவையும் அவற்றில் அடங்கும். இவற்றை இலக்காகக் கொண்டே இந்தக் கொடுப்பனவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

## மாநகரசபையின் கவனத்திற்கு

மட்டக்களப்பு பார் வீதியில் ஓராம்கட்டை அடியில் காணப்படும் பெரிய உப்போடை சந்தியில், சில வருடங்களுக்கு முன்னர் ஒரு சிறுவர் விளையாடும் இடம் அமைக்கப்பட்டது. ஆனாலும் அதை சரியாகப் பராமரிக்காத காரணத்தால் பற்றைபிடித்து சிறுவர்கள் விளையாட முடியாமல் அது கைவிடப்பட்டுள்ளது.



லியோண்

இதனால் அந்த இடம் இப்போது உடைந்தும் துருப்பிடித்தும் காணப்படுகிறது. இரவிலும் மழைகாலங்களிலும் பற்றை காரணமாக பாம்புகள் வீதியில் திரிகின்றன.



எனவே இவ்விடத்தை துப்பரவு செய்வதுடன் சிறுவர் விளையாடும் இடத்தையும் சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்றோம்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# எண்பது வயதிலும் துடிப்போடு இலக்கியப் பணியாற்றும் கலாபூசணம் ஆ.மு.சி.வேலழகன்



உரையாற்றிய திரு.ப.குணசேகரன் கலாபூசணம் ஆ.மு.சி.வேலழகன் இவர்களோடு கலாபூசணம் அரங்கம் இரா.தவராஜா.

மட் / பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை கலாபூசணம் ஆ.மு.சி.வேலழகனின் மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவில் ஆ.மு.சி.வேலழகனைப்பற்றி திரு.ப.குணசேகரன் அவர்கள் ஆற்றிய அறிமுக உரையை சுருக்கி தொகுத்து தருகிறார் கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா அவர்கள்.

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரித்தான கலாபூசணம் ஆ.மு.சி.வேலழகன் அவர்களைப்பற்றிய அறிமுக உரையை ஆற்றுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு முதலில் நான் மிகப்பேருவகை அடைகின்றேன். முகப்பு வெற்றிலைக்கு முகவரி தேவையில்லை என்பார்கள் இருந்தும் எனக்குத் தரப்பட்ட பணிக்காக சில தரவுகளை உங்களோடு மீட்டிப் பார்க்கிறேன்.

திருப்பழுகாமம் என்னும் கிராமத்தில் ஆதிநாராயணன் முத்து சின்னத்தம்பி மற்றும் வேலாயுதர் வள்ளியம்மை தம்பதியருக்கு 12.05.1939ல் பிறந்தவர்தான் இந்தக் கதாநாயகன் ஆ.மு.சி.வேலழகன்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை திருப்பழுகாமம் மெதடிஸ்தமிசன் பாடசாலையில் தொடங்கியபோதிலும் எட்டாம்வகுப்புக்குமேல் தன்குடும்ப வறுமையினால் கல்வியை கைவிட்டு விவசாயத்தில் ஈடுபடலானார். பின் இ.போ.சவில் பேருந்து வண்டியின் ஓட்டுனரானார்.

1952ம் ஆண்டளவில் தன் இளம்பிராயத்தில் ஈ.வெ.ரா பெரியார் அண்ணாத்துரை போன்ற தலைவர்களின் திராவிடக் கொள்கையில் ஈர்க்கப்பட்ட வேலழகன் அக்கொள்கைகளை கடைப்பிடித்தபடி மது, மாமிசம், மச்சம், வெற்றிலை மெல்லுதல், புகைப்பழக்கம் எதுவும் இல்லாமல் இன்றுவரை வாழ்ந்து வருகின்றார். பொறுமை, சகிப்புத்தன்மை, எளிமை, பணிவு, விடாமுயற்சி என்பன அவருக்கே உரித்தான அணிகலன்கள்.

பாடசாலைக்கல்வி இடைநடுவில் விட்டுப்போனாலும் தொடர்ந்து வாசிக்கும் பழக்கத்தை இவர் கைவிடவில்லை சங்க இலக்கியங்கள், காவியங்கள், பாரதியார்கவிதைகள், திருக்குறள் என சகலதையும் வாசித்து மனதில் பதிவேற்றி தேவையானபோது அவைகளை அசைபோட்டுப் பார்ப்பதும் இவரின் நற்பழக்கமாகும். இதனால்தான் இவர் தற்காலத்தில் தமிழுலகம் சுட்டிக் காட்டக்கூடிய மதிப்புக்குரிய படைப்பாளிகளில் ஒருவராகத் திகழ்கிறார்.

இவரும் முன்பு "செண்பகம்"என்னும் சஞ்சிகை ஒன்றை தந்திருந்தார். தான் வாழுமிடமெலாம் ஏதாவது சமூகபணியாற்றத் தயங்கியதேயில்லை. இதனால் திருப்பழுகாமம்; மட்டக்களப்பு; புன்னைச்சோலை; அம்பாறை போன்ற பல இடங்களில் திருக்குறள் முன்னணிக் கழகங்களை உருவாக்கி சமூகப்பணியாற்றி வந்தார். பழுகாமம் கண்ணகி கலைக் கழகம்; மட்டுநகரில் தமிழ்க்கலாசார மன்றம்; புன்னைச்சோலையில் முரசொலி நாடக மன்றம்; படுவான்கரை விவசாயிகளை ஒன்று சேர்த்து விவசாயிகள் அபிவிருத்திச் சங்கம் என பல சங்கங்களை தந்த இவர். மட்டக்களப்பு எழுத்தாளர்களை ஒன்று திரட்டி மட்டக்களப்பு எழுத்தாளர் பேரவை உருவாக ஊற்றுக்கண்ணாக இருந்தார். செயல்பாடு குறைந்திருந்த மட் / தமிழ்ச்சங்கத்தை முன்னேற்ற பாதையில் இட்டுச் செல்ல தனது பங்களிப்பை வழங்கினார். இன்றும் தொடர்ந்து வழங்கியும் வருகின்றார்.

இலக்கிய உலகைப் பொறுத்தவரையில் சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக அசைக்க முடியாத இலக்கிய ஜாம்பவனாக இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்.

இவரினால் ஆக்கித் தரப்பட்ட பல நூல்களில் சிலவற்றை தருகிறேன்.

01.1972ல் தீயும்தென்றலும் கவிதைத்தொகுப்பு 02.1973ல் சாதியாசதியா உரைச்சித்திரம் 03. 1994ல் உருவங்கள்மானிடராய் கவிதைத் தொகுப்பு 04. 1996ல் கமகநிலா சிறுகதைத்தொகுதி 05.1996ல் வேலழகன் அரங்கக்கவிதைகள் 06. 2001ல் மூங்கில்காடு சிறுகதைத் தொகுதி 07. 2001ல் விழியும்வழியும் கவிதைத்தொகுப்பு 08.2004ல் சில்லிக்கொடி ஆற்றங்கரை வரலாற்று நாவல் 09. 2006ல் செங்காந்தள் கவிதைகள் 10. கோடாமை சான்றோர்க்கணி வரலாற்று நாவல் 11. இவர்கள் மத்தியிலே குறுநாவல் 12. 2007ல் கேட்டுப்பெற்றவரம் சிறுகதைத் தொகுப்பு 13. 2008ல் திருப்பழுகாமம் ஒரு சுருக்கவரலாறு 14. 2009ல் தேரான் தெளிவு சிறுகதைத்தொகுப்பு 15. 2010ல் காணா இன்பம் கணிந்ததேனோ 16. 2010ல் செங்கமலம் கவிதைத்தொகுப்பு 17. 2011ல் காடும்கழனியும் நாவல் 18. 2012ல் தொன்மைமிகு திராவிடநாகரீகம் வரலாற்று ஆய்வு

19. 2012ல் வள்ளுவன்சொல்லே வாழும்வழி விவரனம் 20. 2012ல் உள்ளத்தனைய உயர்வு நாவல் 21. 2015. சந்தனக்காடு கவிதைத்தொகுப்பு

22. 2015ல் கும்பிட்ட கையுள்ளும் கொலை செய்யும் கருவி நாவல் 23. 2015ல் கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை இலக்கணம்

**கலாபூசணம்**
**அரங்கம் இரா.தவராஜா**

24. 2018ல் பனிச்சையடிமுன்மாரியும் சட்டக்கிணறும் நாவல் 25. 2018ல் நெஞ்சில்நிறைந்த நினைவுகள் 26. 2018ல் தடம்பதித்த ஆறுமுகம்

இவைகளோடு 24.02.2019ல் இந்த நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று வெளியாகும்

27. மனிதனுக்கே மனிதன் ஈந்த மாமறை; 28. கல்லெறிபட்ட கண்ணாடி; 29. இன்பம் பயக்கும் வினை போன்ற நூல்களை தந்துள்ளார். இவரின் ஆக்கங்கள் பலவற்றுக்கு ஏராளமான விருதுகள் கிடைத்துள்ளன. எமது நாட்டில் மட்டுமல்ல தமிழ்நாடு; மலேசியர் கனடர் சிங்கப்பூர், பிரித்தானியா போன்ற நாடுகளிலும் இலக்கியவாதிகளையும் வாசகர்களையும் ஈர்த்தவராக திகழ்கின்றார். இந்த ஆ.மு.சி.வேலழகன்.

இவரின் சில்லிக்கொடி ஆற்றங்கரை நாவல் பனிரெண்டு மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

---

# மனித உணர்வுகளினை அடிப்படையாக கொண்டு நகரும் சந்தைப்படுத்தல் உத்திகள்

தற்போதைய இருபத்தொராம் நூற்றாண்டில் சந்தைப்படுத்தலானது பெரிதும் சவாலான ஒன்றான நிலைபெற்றுள்ளது. அந்தவகையில் சந்தைப்படுத்தலிற்கான மிகவும் தனித்துவமான ஓர் கருவியாக சந்தைப்படுத்துபவர்கள் மனித உணர்வுகளைப் பயன்படுத்துகின்றனர். ஏனெனில் மனித வளமானது ஏனைய வளங்களுடன் ஒப்பிடுகையில் சிந்தித்து துலங்கக் கூடிய ஆற்றல் கொண்ட வளமாகும் ஆகையால் சந்தைப்படுத்துபவர்கள் மனித உணர்வுகளை கச்சிதமாக தங்களுடைய தந்திரோபாயங்களுக்கு உட்படுத்துகின்றனர். அந்தவகையில் சந்தைப்படுத்தலிற்கு மனித உணர்வுகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என ஆராயலாம்.

நுகர்வோர் மத்தியில் குறித்த பொருள் அல்லது சேவைகள் தொடர்பாக புரிந்துணர்வினையும் அறிவினையும் ஏற்படுத்துவதற்கு விளம்பரப்படுத்தலானது ஓர் சாதனமாக காணப்படுகிறது. இதனை உற்று நோக்கும் போது ஒருவருக்கு கருத்தும் பொருளும் தெளிவுற நியாயப்படுத்துவதற்கு மனித உணர்வுகளை நிழற்படமாக விளம்பரங்களில் சித்தரிக்கப்படுகின்றது. அந்தவகையில் விளம்பரப்படுத்தலானது பல வழிமுறைகளில் கைக்கொள்ளப்படுகின்றது. ஒரு அச்சு விளம்பரத்திலோ அல்லது தொலைக்காட்சி விளம்பரத்திலோ மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியுமானால் உணர்ச்சி பரிணாமங்களைக் கொண்ட ஒரு வியாபாரக்குறியின் முக்கிய கூறுகளை பிரதிபலிக்க முடியும். உதாரணமாக



மனிதர்களுக்கிடையில் மனோபாவங்கள், சக்தி மற்றும் நிதியியல் நிலைகள் மாற்றமடைவது போல வியாபாரக் குறிகளுக்கிடையிலும் பல தனித்துவங்கள் காணப்படுகின்றன. இவற்றினை வேறுபடுத்தி பகுத்தறிவதற்காக மனித உணர்வுகளை வியாபாரக் குறியுடன் தொடர்புபடுத்துகின்றனர். அந்தவகையில் விளம்பரப்படுத்தலானது பொதியிடல், வாசகங்கள், கவர்ச்சி, பாவனைமுறைகள்

**வி. சசிரேகா**
**4ம் வருடம்**
**சந்தைப்படுத்தல் பிரிவு**
**வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

மற்றும் கிடைப்பனவுத்தன்மையானது குறித்த ஒருசில நொடிகளில் பாவனையாளர்களின் மனதைத் தொடும் வண்ணம் வடிவமைக்கின்றனர். இதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அறிவூட்டல் மற்றும் நுகர்வுக் தூண்டுகை செயன்முறைகள் ஒரே பார்வையில் இடம்பெறுகின்றன.

விளம்பரப்படுத்தலானது மனித உணர்வுகளைத் தூண்டக் கூடிய இன்னோர் அடித்தளமாகும். எவ்வாறெனில் விளம்பரப்படுத்தலானது ஓர் விவரிப்பு முறையாகும். இதன் மூலம் குறித்த வியாபாரக்குறியினது அடிப்படைத் தன்மைகளைக் குறிப்பிடுகின்றனர். இதனால் வாடிக்கையாளர்களுக்கு குறுகிய நேரத்தில் கொள்வனவைத் தூண்டக் கூடிய உந்துதலை அளிக்கிறது.

கொள்வனவாளர்கள் கொள்வனவு நடவடிக்கையில் ஈடுபடுதலானது எதேச்சையான ஒன்றாக எப்போதும் கருத முடியாது. ஏனெனில் கொள்வனவு நடவடிக்கையானது சமீபத்தில் அல்லது கடந்தகால அனுபவங்களில் இருந்து எழலாம். ஆகவே விளம்பரப்படுத்தல் மூலம் மீண்டும் மீண்டும் வாடிக்கையாளர் மத்தியில் தடம் பதிப்பதற்காக விளம்பரப்படுத்தலினை சந்தைப்படுத்துபவர்கள் உபயோகிக்கின்றனர்.

சந்தைப்படுத்துபவர்கள் வாடிக்கையாளர் மத்தியில் சுய கௌரவத்தைத் தூண்டும் வகையிலும் தமது உற்பத்திகளை விளம்பரப்படுத்தலின் ஊடாக கொண்டுசெல்கின்றனர். உதாரணமாக அப்பிள் கம்பனியினால் வடிவமைக்கப்படுகின்ற ஐ போன் ஆனது வாடிக்கையாளர் மத்தியில் தமது சுய கௌரவத்தினை உறுதிப்படுத்த கொள்வனவு செய்யத் தூண்டுகின்றது. இதற்காக அப்பிள் நிறுவனத்தினர் முற்றிலும் வேறுபட்ட வகையில் கறுப்பு வெள்ளை நிறங்களை அனேகமாகப்பயன்படுத்தி மனித உணர்வுகளைத் தூண்டுகின்றனர்.

சந்தைப்படுத்தலானது ஓர் கலையாகக் காணப்படுவதனால் பெருமளவில் மனித உணர்வுகளில் தாக்கத்தை உண்டாக்குகின்றது. இருப்பினும் பல ஏமாற்று நடவடிக்கைளும் கைக்கொள்ளப்படுவதனால் சந்தைப்படுத்துபவர்கள் உதாரணமாக வாழ்கைக்கோல விளம்பரப்படுத்தலைப் பயன்படுத்துகின்றனர். இம் முறையானது மக்கள் மத்தியில் உண்மைத்தன்மையினையும் உறுதித்

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## படுவான்கரையும் விவசாயச் செய்கையும்

'அடுத்த போகமும் ஆரம்பிக்க போகின்றது. ஆரம்பக்கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன. என்னதான்கூடியும் சரியான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதில்லையே' என திருத்தணிகாசலம் பேரின்பத்திடம் புறுபுறுத்துக்கொண்டிருந்தான்.

படுவான்கரைப் பிரதேசத்தில் தாமரைப்பூச்சந்தியென்றால் எல்லோரும் இலகுவாக இனங்காட்டிவிடுவர். நான்கு பக்க வீதியின் நடுவே தாமரைப்பூ ஒன்று அமைக்கப்பட்டு அதிலே பலரின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் கடந்த சில காலம் தாமரைப்பூவே இல்லாமல் போய், இப்போதுதான் புதிய தாமரைப்பூ அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் அருகில் நின்று, வில்லுக்குளத்தினைப் பார்த்து இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப்பிரதேசம் என்பது, அதிகளவு நெற்செய்கை காணியினை கொண்டமைந்த பகுதியேயாகும். இங்குள்ள மக்களும் விவசாயத்தினையும், கூலித்தொழிலையும் செய்தே தமது வாழ்க்கையினை நடத்திச் செல்கின்றனர். இதனால் வறுமை சூழ்கின்றபோதும் இவர்கள் வேளாண்மைச் செய்கையை கைவிடுவதில்லை. அதிகளவானவர்கள் கடன்பெற்றே நெற்செய்கையையும் செய்துகொண்டிருக்கின்றனர். இதனால் இலாபத்தினை பெறுவதைவிட நட்டத்தினையே அதிகம் பெற்றுக்கொள்கின்றனர். ஆனாலும் சோற்றுக்காவது நெல்கிடைக்கின்றது என்ற சந்தோசத்தில் விவசாயத்தினை செய்துகொண்டு வாழ்கின்றனர். 'விவசாயத்தில் இன்றுவரை பெரிதளவில் இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளாமையில் க பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன' எனக்கூறிய திருத்தணிகாசலம். நெல் அறுவடை, விற்பனை தொடர்பிலும் அதிகம் பேசத்தொடங்கினான்.

நெல் அறுவடை என்பது, இற்றைக்கு ஒரு தசாப்தங்களுக்கு முன்பு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்தது. மனிதர்களின் வலு அதிகம் பயன்படுத்தப்பட்ட காலமாகவிருந்தது. நெல் அறுவடையை மனிதர்களே அறுவடை செய்தனர். இதனால் அறுவடை நிறைவுக்கு பல நாட்கள் எடுத்தன. அறுவடை செய்வது, உப்பட்டிகட்டுவது, சூடுவைப்பது, சூடுமிதிப்பதென தொடர்ச்சியாக நடைபெற்ற பின்பே நெல்லை வீட்டுக்கு கொண்டு சென்றனர். இதன்பயனாக அந்த நெல்லுக்கு நல்ல மரியாதை கிடைத்தது. ஆனால் தற்கால விவசாயமுறை இயந்திரங்களோடு இணைந்திருக்கின்றமையினால் நெல்லுக்கான மதிப்பென்பது குறைவாக காணப்படுகின்றது. ஓரிரு தசாப்தங்களுக்கு முன்பு அறுவடையை பெற்றுக்கொள்ள தொடர்ச்சியாக மனிதவலுக்களின் உதவியுடன் ஒன்றுக்குமேற்பட்ட நாட்கள் தேவைப்பட்ட அதேவேளை இன்று ஒருநாளில் சில மணித்தியாலங்களில் இயந்திரம் மூலமாக உடனடியாக நெல் கையிலே கிடைத்துவிடுகின்றது. அதனால் என்னமோ அதற்கான மரியாதையும் குறைந்துவிட்டது. அறுவடை செய்யத்தொடங்கி அறுவடை நெல்லைவீட்டுக்கு கொண்டுசெல்லும் வரை நெல்வயலிலே விவசாயிகளுக்கு வேலையிருந்தது. அதேநேரம் பெரும்பான்மையாக எல்லோரது நெற்பயிரும் ஒரே காலத்தில் அறுவடைக்கு தயாராகிவிடும். அறுவடைகளும் ஓரிரு நாட்கள் வித்தியாசத்தில் இடம்பெறும், விவசாயச் செய்கையை விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான செயற்பாடுகளும் பகல், இரவாக நடைபெறும். அறுவடைத் திகதிகளுக்கு ஏற்ப அறுவடைகளும் நடைபெறும். தற்காலம், அறுவடைக்கான திகதி, ஆரம்பத்திகதி போன்றன தீர்மானிக்கப்பட்டாலும் அத்திகதிகள் கவனத்தில்

**படுவான் பாலகன்**

கொள்ளப்படுகின்றதா? என்பதையே கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. ஒருவரின் நெற்பயிர் அறுவடைக்கு தயாராகிவிட்டால் உடனடியாக இயந்திரத்தினை அழைத்து அறுவடை செய்துவிட்டு, அன்றே அவ்விடத்தினை விட்டு அகலுகின்றனர். அருகில் உள்ள நெற்பயிர் அறுவடை செய்வதற்கான காலத்தினை அடைந்துவிட்டதா என்பதனை அவதானித்து அதற்கேற்றவகையில் தமது அறுவடையை தீர்மானிப்பதென்பது மிகவும் குறைவே. அதேவேளை தமது அறுவடை முடிந்ததும் அவ்விடத்தினை விட்டு அகன்று செல்வதும், தமது பாதுகாப்புக்களையும் நீக்குவதால் அருகில் உள்ள விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதேநேரம் மந்தை வளர்ப்பாளர்களும் அறுவடை செய்ய நெல்வயலுக்குள் மந்தைகளை அனுப்பி விடுகின்றனர். இதன்காரணமாக ஏனைய விவசாயிகள் இன்னும் பாரிய நெருக்கடிக்குள்ளாகி, அறுவடை செய்வதற்கேற்ற நிலையினை நெற்பயிர் அடையாவிட்டாலும், பச்சையிலே நெல்லினை அறுவடைசெய்கின்றனர். இதனால் உரிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ளவும், தரமான நெல்லினை உற்பத்தி செய்யவும் முடியாது போகிறது.

நெல்லின் அறுவடை முடிந்தவுடன் ஈரப்பதனைக் கருத்தில் கொண்டு உடனடியாக விற்பனை செய்யவேண்டிய கட்டாயத்திற்குள்ளும் விவசாயிகள் உள்ளாவதோடு, ஈரப்பதனான நெல்லினை காயவைப்பதிலும் தொடர்ச்சியாக மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டும் வருகின்றனர்.

நெல்லினை காயவைப்பதற்கான களமின்மையின் காரணமாக கொங்கிறீட் வீதிகளையே காயவைக்கும் இடமாக மாற்றிக்கொள்கின்றனர். இதனால் உற்பத்தி செய்யப்பட்ட நெல் வீதியால் செல்லும் இயந்திரங்களின் சில்லுகளுக்குள் அகப்பட்டு உடைந்து அரிசியாக்கப்படுவதும், நெல்லுடன் கற்கள், ஏனைய சகதிகள் சேர்வதும் நடந்தேறுவதும், வீதியால் செல்பவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதும், விவசாயிகள் சீதேவி என தாம் நினைப்பதை எல்லோரும் மிதிக்கும் நிலையை உருவாக்குவதென்பதையும் எண்ணி கவலையுறுவதும் தற்கால விவசாய செய்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளாக உள்ளன. இவ்வாறு கூறிய திருத்தணிகாசலம் நாளை இதுதொடர்பில் தொடர்ந்தும் பேசுவோம் எனக்கூறிவிட்டு அவ்விடத்தினைவிட்டு அகன்றார்.

---

## 'அது பாம்பு அல்ல விலாங்கு மீன்'

மட்டக்களப்பு நகரை அண்மித்த சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி பகுதியில் அண்மையில் திடீரென பாம்புகள் பெரும் அளவில் தென்பட்டதாக வந்த செய்தி இங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பாம்புகள் ஆற்றில் படையெடுத்து வருகின்றன என்ற கதையால் பெருமளவு மக்கள் அவற்றைப் பார்க்க அங்கு படையெடுத்தனர். அப்படிப் போனவர்களில் நானும் ஒருவன்.

ஆனால், அங்கு சென்று பார்த்த பின்புதான் அவை எல்லாம் பாம்புகள் அல்ல ஒருவகை விலாங்கு மீன்கள் என்று தெரியவந்தது.

இந்தவகை மீன்களை விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் அவற்றில் 20 குடும்பங்கள், 111 மரபுகள் மற்றும் சுமார் 800 இனங்கள் காணப்படுகின்றன. இவை பாம்பு போன்ற உடல் அமைப்பை பெற்றவை.(எனவேதான் நாம் பாம்பு என்கிறோம் ) ஆனால் மிக விரைவாக மண்ணுக்குள் புகுந்துவிடும் இயல்புடையவை.

இவ்வகை விலாங்கு மீன்கள் ஏரிகள், ஆறுகள் ஏன் சில நன்நீர்க்குளங்களிலும்





வாழும் தன்மை உடையவை. முக்கியமாக நீருக்கு அடியில் பாறைகள், கண்டல் தாவரம், மணற்பாங்கான பகுதி போன்ற பிரதேசங்களில் தான் இவற்றின் பெரும்பாலான இனங்கள் வாழும்.

இவை காலத்துக்கு காலம் தாம் வசிக்கும் இடத்தை விட்டு வெளியேறி இடம்பெயரும். பொதுவாக இவை கடலை நோக்கி செல்ல எத்தனிக்கும். ஆனாலும் ஒரு சிலவகை அவ்வாறு செல்வதில்லை. ஆழமான பிரதேசங்களில் தங்கிவாழும். இவ்வாறு தங்கிவாழ்வதால் இவை 3மீற்றர்(10 அடி) வரை 110கிலோகிராம் வளரக்கூடிய தன்மையுடையவை. இவை பெரும்பாலும் வெளிச்சத்தை விரும்புவது இல்லை, எனவேதான் இவற்றை நாம் காண்பது

**லியோண்**

அரிது. இவற்றின் ஆயுள்காலம் சராசரியாக 32 தொடக்கம் 88 வருடங்கள்.



இவை கரை ஒதுங்குவதற்கு பல காரணங்கள் ஆய்வாளர்களால் கூறப்படுகின்றன.

1. இன இடப்பெயர்வு
2. நீரின் அடர்த்தி மாற்றம்
3. ஆள்கடல் எரிமலை வெடிப்பு
4. தாங்க முடியாத நிலநடுக்கம்
5. ஆள்கடல் வாய்வுக்கசிவுகள்


இதில் நாம் ஒரு குறிப்பிட்ட விடயத்தை கவனித்தால் சுனாமி வருவதற்கு முன்னர் இந்தோனேசியா, இலங்கை ஏன் மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தில் கூட இவ்வகையான விலாங்கு மீன்கள் கரையோதுங்கியது அனைவரும் அறிந்த விடயமே

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

17

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---



மேற்காட்டிய கோயில் அமைப்பினை உற்று நோக்குவோம். கோயில் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமே அரங்கமாகும். இவ்வரங்கு பெரிய கோயில் (இல.12) சிறிய கோயில் (இல.8) என இரண்டு பிரதான பிரிவாகவும், பிரிபட்டுள்ளது. அரங்கின் ஆங்காங்கே சிறு உப அரங்குகளாக பந்தல்கள் உள்ளன. இவைதான் நாடகம் நிகழும் இடம். மக்கள் சுற்றவர இருந்து பார்க்கும் முறையில் மக்கள் இருக்கும் இடம் அமைக்கப்பட்டுள்ளது. (இல.8, 4). கோயிலைச் சுற்றி தெய்வக்காரர் ஆடுகையில் ஒரு வட்டக் களரிக்குரிய அமிசமே தென்படுகிறது. ஆண்களுக்கு வேறு வாசலும் (இல.1), பெண்களுக்கு வேறு வாசலும் (இல.2) ஒதுக்கப்பட்டுள்ளன. நாடகத்தில் நடிக்கும் நடிகர்கள் தங்கி தம்மை நாடகத்திற்குத் தயார்படுத்திக் கொள்வதைப் போல (இல.13) இத் தெய்வத்திற்கு ஆட இருப்பவர்களும், பூசாரிமாரும் தங்கியிருந்து உரிய நேரம் வந்ததும் தெய்வம் ஆடுவதற்குரிய உடுப்புகள் அணிந்து குறிப்பிட்ட தீர்த்தக் கிணற்றில் முழுகிய பின்னர் (இல.14) குறிப்பிட்ட அரங்கின் ஒரு பிரிவான அம்மன் கோயிலுக்குள் வருவர். (இல.8) அம்மன் கோயிலினுள் நீளமாக வெள்ளை நிறமான சேலை வண்ணானால் விரிபட்டு அதற்குமேல் ஒவ்வோர் தெய்வக்காரருக்குமுரிய வேப்பம் கொத்தும், சிலம்பு ஒரு சோடியும் வைத்திருப்பர். ஒவ்வொரு வேப்பம் கொத்துக்கும் முன்னால் ஒவ்வொரு ஆட்டக்காரர் வந்து வரிசையாக நின்றதன் பின்னர் அவர்கள் மீது மஞ்சள் பூசுவர். பூசகர் அவர்களின் காதில் மந்திரம் ஓதி அவர்கட்குச் சன்னதம் உண்டாக்கி மந்திர வலிமையை வேப்பிலைக்கும், கமுகம் பூவுக்கும் கொடுத்து அவற்றை அவர்கள் இடுப்பில் அணிவிப்பார். கீழேயிருக்கும் வேப்பிலைக் கொத்தை அவர்கள் கையில் கொடுப்பார். சிலம்புகளை அணிவித்து விடுவார்.

இச்சடங்குகள் முடிந்ததும் எதிர் வரிசையில் உடுக்குடனும், சிலம்புடனும், அம்மனைக் காயுடனும், நிற்போர் அவ்வாத்தியங்களை இசைக்கத் தொடங்குவார். தவில் சப்தம் இதற்காக மெல்ல மெல்ல அதிரத் தொடங்கும்.

தனதனன தனதனன தனதனன தானா
தந்தனன தனதனன தானதன தானா

என்ற இசைக்கேற்ப அனைத்து இசைக் கருவிகள் ஒரே சுதியில் மெல்ல மெல்ல இசைக்க ஆரம்பிக்க அன்ன பரிபூரணி சொன்ன அருள் பாலினி எனத் தொடங்கும் காவியத்தை இசை ஒலிக்கு ஏற்ப சிலர் பாடுவர். காவிய இசை பாடுவோரின் கண்டத்திலிருந்து எழ, உடுக்கு அதற்கு ஏற்ப கும், கும் என உறுமி ஓசை எழுப்ப, தவில் திம் திம் என ஓசை எழுப்ப தெய்வக்காரர் மெல்ல மெல்ல உருப்பெறுவர். நின்ற இடத்திலேயே வேப்பிலைக் கொத்தால் முகத்தை மறைத்து இடுப்பை வளைத்து அசையத் தொடங்குவர்.

இசை ஒலிகள் மெல்ல மெல்ல வேகநிலைக்குச் செல்ல அவர்களின் அசைவும் மெல்ல மெல்ல கூடும். ஆடல் மெல்ல மெல்ல உக்கிரமாகி கால்கள் நின்ற இடத்தில் அசையாது நிற்க, கண்கள் சொருகிய நிலையில் இடுப்புக்கு மேல் உள்ள பாகம் முழுவதையும் முழு வட்டமாகச் சுழற்றிச் சுழற்றி தாளத்திற்கு இசைய ஆடுவார்கள். நேரம் செல்லச் செல்ல ஆட்டம் உச்ச நிலைக்குச் செல்லும். அவ்வமயம் திரை திறக்கப்படும்.

உச்சநிலையை நிதானப்படுத்துவது திரை திறப்பாகும். அச்சமயம் தெய்வம் ஏறியோர் வேப்பிலையை முகத்தினின்றும் எடுத்து, மூலஸ்தானத்திலுள்ள அம்மனின் முகக்களையை உற்று வெறித்துப் பார்த்து ஹா ஹா ஹ~ய் என ஒலி எழுப்பியபடி ஆடுவார்கள். அவர்களின் அத்துரித கதி ஆட்டத்திற்கேற்ப உடுக்கும், தவிலும் ஒலிக்கும். தலைமைத் தெய்வம் மனித நிலைக்கு இறங்கி அம்மனுக்குப் பூசாரியின் உதவியுடன் பூசை செய்யும். இங்கே தெய்வக்காரர் ஒரே நேரத்தில் தெய்வமாகவும், மனிதனாகவும் இருக்கும் நிலையினைக் காண்கிறோம்.

அம்மன் கோயிலில் கிரியைகள் முடிந்தவுடன் இல. 12ல் குறிப்பிடப்பட்ட பெரிய கோயிலுக்குட் பூசாரியாரும், வாத்தியம் இசைப்போரும், பாடுவோரும், உதவியாளர்களும், தெய்வக்காரரும், மக்களும் வருவர். மக்கள் வெளிமண்டபத்தினுள் நிற்க ஏனையோர் உள் மண்டபத்திற்குள் செல்வர்.

உள் மண்டபத்துள் தெய்வக்காரர் முன்போல வரிசையாக நிற்க, அதே தாளத்திற்கு நரசிங்க காவியம் பாடப்படும். முன் போலவே ஓர் இசை அமைதியும் தாள லயமும் கலந்த சூழல் உருவாகும். நின்ற இடத்திலேயே தெய்வக்காரர் தலை சுழற்றி ஆடுவர். ஆட்ட உச்சத்தில் இக்கோயில் திரை திறக்கப்படும். இக்கோயிலுள் இச்சமயம் நரசிங்கம், சிங்கனாதம் போன்ற உக்கிர தெய்வங்கள் எல்லாத் தெய்வக்காரர்களிலும் முற்படுவதால் இந்த ஆட்டம் முந்திய ஆட்டத்தை விட வித்தியாசமான ஓர் ஆட்டமாக இருக்கும்.

ஆரம்பத்தில் தேகிடு, தேகிடு, தேகிடு, தேகிடு, தேகிடு, தேகிடு என்ற சொற்கட்டை தவிலில் ஒருவர் துரிதகதியில் வாசிக்க, அதற்கேற்ப சிறிய அடிகளை வைத்து துரித கதியில் ஆடும் தெய்வக்காரர் சிறிது நேரத்தால் தேகிடு, திந்தத், தேகிடு திந்தத், தேகிடு திந்தத், தேகிடு திந்தத் எனத் தாளக் கட்டு மாற்றப்பட்டு அத்தாளக்கட்டு மெல்ல மெல்ல இடையிட்டு தவிலில் அழுத்தி அடிபட ஆரம்பித்ததும் அதற்குத்தக மாறி மாறி வைத்து ஆடுவர். இவ்வாட்டம் முடிய பூசாரியார் தலைமையில் தெய்வக்காரர் ஒழுங்காகப் பந்தலுக்குப் பந்தல் செல்வர். முதலில் இல.18 லுள்ள கொடி மரத்தடி செல்வர். அங்கு பூசாரியார் அப்பந்தல் மடையிலுள்ள தேங்காயை உடைத்து தெய்வக்காரர். தலையில் இளநீரை வார்த்துப் பூசை முடிப்பார். பின்னர் தெய்வக்காரர் பூசாரியார் தலைமையில் இல. 9,15,16,17,19, 23, 5, 6, 7 ஆகிய பந்தல்களுக்கு ஆடிச் செல்வர். கொடி மரத்தடிப் பந்தலில் நடந்த அதே கிரியை எல்லாப் பந்தல்களிலும் நடைபெறும்.

பெரிய கோயிலை விட்டுத் தெய்வமாடுவோர் வெளிக்கிட்டுக் கொடிமரத்தடிப் பந்தலில் பூசை முடிந்ததும் பெரிய கோயிலுக்குள் நின்று வழிபட்ட பெண்களும், ஆண்களும் தத்தமக்குரிய படத்திற் குறிப்பிட்ட இல. 3, இல.4 ஆகிய இடங்களிற்குச் சென்று நின்று கொண்டு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆரம்பிப்பர்.

எல்லாப் பந்தல்களிற்கும் தெய்வங்கள் பூசாரியாருடன் சென்று பெரிய கோயிலுக்குள் திரும்பிய பின்னர் ஒவ்வொருவருக்கும் புதிய புதிய தெய்வங்கள் வந்து முற்படும். எடுத்துக்காட்டாக குறிப்பிட்ட ஒருவர் ஆடி

'மகனே காளி வந்து முற்படப் போகிறதடா" என்று பூசாரியிடம் கூறப் பூசாரியார் காளிக்குரிய மந்திரத்தை உச்சரித்து அத்தெய்வத்திற்குரிய பாடலைப்பாட, காளி தெய்வம் முற்பட்டு வெளியேயுள்ள காளி பந்தலுக்கு (இல.9) சென்று ஆடத் தொடங்கும்.



இதே போல ஒவ்வொரு தெய்வங்களும் முற்பட்டுத் தத்தமக்குரிய பந்தலுக்குச் சென்று ஆடும். குறிப்பிட்ட பந்தல்களுக்கருகில் வந்து சூழ்ந்து நின்று அத்தெய்வ ஆட்டத்தைப் பார்ப்பினும், வதனமார், மாறா ஆட்டம், நரசிங்க பலி ஆட்டம் போன்ற பெரும் காட்சிகளை




மக்கள் கோயிலை வளைத்திருந்தே பார்வை இடுவர்.

பங்கு கொள்வோர், பார்வையாளர் என்ற பிரிவு ஏற்படுவதனையும், பங்குகொள்வோர் சில கடமைகளை முன்பு செய்தது போலச் செய்வதையும், அதற்குத் தக வேடமணிந்து இருப்பதனையும், நரசிங்கம் போலவும், காத்தான் போலவும், வதனமார் போலவும் அபிநயிப்பதனையும் காண்கிறோம். அதற்குத் தக ஒரு ஆட்டமுறை பாவிக்கப்படுகிறது. ஆட்ட முறைக்கு தக உடுக்கு, சிலம்பு, தவில் ஆகிய வாத்தியங்களும் வாசிக்கப்பட்டு காவியம், சிந்து, தோத்திரம் போன்ற இசைப்பாடல்கள் இசைக்கவும்படுகின்றன.

கோயிலின் நடுவெளி மேடையாகவும் அதிலுள்ள பந்தல்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நாடகமாகவும் அமைய மக்கள் பார்வையாளராயும் இடையிடையே பங்காளராயும் அமைந்துள்ள இப்பெரு விழா எமக்கு ஒரு புராதன நாடகத்தை காணும் மன உணர்வையே தருகிறது.

மற்றவர்க்கு அது எதுவாயினும் அதனை நிகழ்த்தும், பார்க்கும் மக்களுக்கோ அது பெருநம்பிக்கை. அவர்களின் ஊனோடும் உதிரத்தோடும் உயிரோடும் கலந்து விட்ட நம்பிக்கை. அந்நம்பிக்கைக்கான சமூகக் காரணங்கள் உண்டு. அது வேறிடத்தில் ஆராயப்பட வேண்டியது.

(தொடரும்)

---

தொடர்ச்சி...

# கோடீஸ்வரனுக்குக் கிடைக்காத வெற்றியும் சுமத்திரனுக்குக் கிடைத்த வெற்றியும்?

விரும்புகிறார்கள். எண்பத்தி இரண்டாம் ஆண்டு வரைக்கும் (1972 ?) எங்கள் இறுதி நீதி மன்றமாக பிரிவி கவுன்சில் தான் இருந்து வந்துள்ளது. பொதுநலவாயத்திலுள்ள எந்த நீதிபதிகளும் எங்கள் நீதி மன்றங்களில் வாதாட முடியும். நீதிபதிகள் செயல்பட்டுள்ளார்கள். சட்டமா அதிபதிகள் இருந்துள்ளார்கள். அவர்கள் பிரித்தானியப் பிரசைகள். ஆகையினாலே நடந்த விடயங்களைக் காட்டி, இது ஒன்றும் புதிய விடயம் அல்ல என்று சொல்லுவதற்காக இருக்கலாம்'என்று சுமந்திரன் கூறுகிறார்.

ஆனால் அதேசமயம் கடந்த ஒக்டோபர் மாத ஆட்சிக் குழுப்பத்தின் பின் நாட்டின் ஜனநாயகம் வெற்றி பெற்றிருப்பதாக கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பெருமைப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இது தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்புக் காரணமாக இலங்கைத்தீவின் நீதிபரிபாலனக் கட்டமைப்பின் அந்தஸ்து உயர்ந்திருக்கின்றது. இது ஒரு அனைத்துலக விசாரணை பொறிமுறைக்கான ஈழத்தமிழர்களின் கோரிக்கைகளைப் பலவீனப்படுத்தக் கூடியது. இந்த இடத்தில் கோடீஸ்வரன் பெறாத வெற்றியையும் சுமந்திரன் பெற்ற வெற்றியையும் தமிழ் மக்கள் ஒப்பிட வேண்டும். கடந்த வாரம் வடக்கிற்கு விஜயம் செய்த ரணில் விக்கிரமசிங்க மறப்போம் மன்னிப்போம் என்று கூறியதன் பின்னணியில் வைத்தும் இந்த ஒப்பீட்டை செய்ய வேண்டும்.

இது ஜெனீவா கூட்டத் தொடர் காலம். தமிழ் மக்கள் ஐ.நா வை நோக்கியும் அனைத்துலக சமூகத்தை நோக்கியும் அதிகரித்த எதிர்பார்ப்போடு காணப்படும் ஒரு காலகட்டம் இது. கடந்த சுமார் பத்து ஆண்டுகளாக தமிழ் மக்களின் ஏதிர்பார்ப்பு என்னவாயிற்று என்பதனைக் குறித்து தொகுக்கப்பட்ட ஆய்வு முடிவு எவையுமின்றி மறுபடியும் மறுபடியும் ஐ.நா வை நோக்கித் தமிழ் மக்களின் கவனம் குவிக்கப்படுகின்றது. ஐ.நா முன்வைக்கும் நிலை மாறுகால நீதியும் ரணிலின் மறப்போம் மன்னிப்போம் என்ற போதனையும் ஒன்றா? நிலை மாறுகால நீதி எனப்படுவது நீதிக்குப் பதிலாக நிவாரணத்தை அல்லது அபிவிருத்தியை வழங்குவதா? ஒரு தீர்வு வருமென்று பெரும்பாலான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது நம்பத் தயாரில்லை. எனவே கிராம எழுச்சித் திட்டத்தின் கீழான நிதி ஒதுக்கீட்டை வைத்துக் கொண்டு அபிவிருத்தி அரசியலை முன்னெடுக்க தொடங்கி விட்டார்கள்.

இது ரணில் கூறும் மறப்போம் மன்னிப்போம் அரசியலுக்கு சாதகமானது. அபிவிருத்தி திட்டங்களின் மூலம் அடிப்படை கோரிக்கைகளை மறக்கச் செய்யலாம் என்று ரணில் நம்புகிறார். அவரைப் பின்னிருந்து பாதுகாக்கும் மேற்குலகமும் ஐ.நா வும் அவ்வாறு நம்புகின்றனவா? இப்படிப்பட்டதோர் உள்நாட்டு மற்றும் அனைத்துலகச் சூழலில் ஜெனீவா கூட்டத் தொடரில் தமிழ் மக்களுக்கு சாதகமாக ஏதும் அதிசயங்கள் அல்லது அற்புதங்கள் நிகழ முடியுமா? பிறிவி கவுன்சிலில் கோடீஸ்வரனுக்கு நீதிக்காக போராட ஒரு வெளி கிடைத்தது. ஆனால் இலங்கைத் தீவுக்குள் அவருக்கு அந்த வெளி மறுக்கப்பட்டது. கோடீஸ்வரன் போராடிய கால கட்டத்தில் இருந்த அதே நிலமைதான் இப்போதும் உள்ளதா? அதுவும் ஓர் இனப்படுகொலைக்குப் பிறகு?

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 25

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சென்ற வாரங்களில் வினாத்தாள் Iக்குரிய (தமிழ் I) கட்டாய வினாக்ககளின் அமைப்பைப் பார்த்தோம். அவற்றுக்கான மாதிரி வினாக்களையும் நோக்கினோம். இவ்வாரத்திலிருந்து வினாத்தாள் IIக்குரிய (தமிழ் II) கட்டாய வினாக்களி ன் அமைப்பைப் பார்ப்போம். அந்தவகையில் வினா 1 தரப்படுகிறது. இது, மாதிரிவினா என்பதைக் கவனத்திற்கொள்க.

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் வளைநா ஒலி எழுத்து
(1) ள் (2) ய் (3) ப் (4) ங் (5) ன் (.......)

1.2 பின்வருவனவற்றுள் ஏகாரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) தேவாரம் (2) தேட்டம் (3) தேன் (4) தேர் (5) ஏலம் (.......)

1.3 பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
(1) மலிவு (2) விளக்கு (3) கடுகு (4) காது (5) சில்லு (.......)

1.4 பின்வருவனவற்றுள் சாரியை பெறாதது
(1) தோடம்பழம் (2) கடந்தனன் (3) வீட்டிற்கு (4) பத்தை
(5) பலவற்றை (.......)

1.5 பின்வருவனவற்றுள் ஆய்தக் குறுக்கம்
(1) வில.்.்.கிய (2) அ.்.கடிய (3) எ.்.கு (4) அ.்.து
(5) அ.்.றிணை (.......)

1.6 பின்வருவனவற்றுள் உடம்படுமெய்யை ஏற்றுப் புணர்வது
(1) கல் + குவியல் (2) தரை + தோற்றம் (3) கண் + இமை
(4) கரை + ஓரம் (5) மரம் + வீடு (.......)

1.7 'தங்கள் வரவு நல்வரவாகுக.' - இதில் 'தங்கள்' என்பது
(1) படர்க்கை மரியாதைப் பெயர் (2) முன்னிலை மரியாதைப் பெயர்
(3) படர்க்கைப் பன்மைப் பெயர் (4) தன்மை மரியாதைப் பெயர்
(5) முன்னிலைப் பன்மைப் பெயர் (.......)

1.8 பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் **அல்லாதது**
(1) உண்ணல் (2) வறுத்தல் (3) உண்டமை (4) காணல்
(5) தேடல் (.......)

1.9 'நேற்றுக் குசினிக்குள் வந்தது இந்தப் பூனைதான்.' இதில் 'வந்தது' என்பது
(1) வினையாலணையும் பெயர் (2) தொழிற்பெயர்
(3) காலங் காட்டும் தொழிற்பெயர் (4) ஒன்றன்பால் இறந்தகால வினைமுற்று
(5) அ.்.றிணை ஒன்றன்பால் வினைமுற்று (.......)

1.10 பின்வருவனவற்றுள் பண்புத்தொகை இடம்பெற்றுள்ள வாக்கியம்
(1) அந்த நாட்டின் ஏவுகணைத் தாக்குதலால் பலர் உயிரிழந்தனர்.
(2) தாய்சேய் நலன் பேணும் நிலையத்தைக் கண்டேன்.
(3) அந்த அழகான முழுநிலவைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன்.
(4) மீன்சந்தையில் ஏற்பட்ட மோதலால் நான்கு கடைகள் பகுதியளவில் சேதமடைந்தன.
(5) பால்நிலவைக் கண்டு நான் பரவசமடைந்தேன். (.......)

1.11 பின்வருவனவற்றுள் ஏழாம் வேற்றுமைத் தொகை
(1) வீட்டுக்கூரை (2) நாட்டுக்கட்டை (3) ஆட்டுக்குட்டி
(4) காட்டுயானை (5) வாட்டசாட்டம் (.......)

1.12 பின்வருவனவற்றுள் 'ஆவது' என்பது குறைந்தபட்சப் பொருளை உணர்த்துவது
(1) அவராவது இன்றைக்கு வருவதாவது
(2) அவன் முதலாவது இடத்தைப் பெற்றான்.
(3) எப்படியாவது நடந்தால் போதும்.
(4) ஒரு பொய்யாவது சொல் கண்ணே
(5) கோப்பியாவது தேநீராவது குடித்தால் நன்றாயிருக்கும். (.......)

1.13 பின்வருவனவற்றுள் பிறவினை
(1) கலைந்தார்கள் (2) பொரித்தேன் (3) வெட்டினேன் (4) பாய்ந்தான்
(5) ஏறினான் (.......)

1.14 பின்வருவனவற்றுள் பொதுவினை
(1) எரி (2) நட (3) தேடு (4) பற (5) வா (.......)

1.15 'செய்து' என்னும் வாய்பாட்டடியாகப் பிறந்த வினையெச்சம்
(1) எழுதி (2) எழுத (3) எழுதினால் (4) எழுதிய (5) வந்த (.......)

1.16 பின்வருவனவற்றுள் துணைவினை கொண்ட வாக்கியம்
(1) அவர்கள் மரியாதை இல்லாமல் முன்னுக்கு இருக்கிறார்கள்.
(2) அவர்களிடம் போதியளவு பணம் இருக்கிறது.
(3) அவர்கள் அவசரமாகக் கொழும்புக்குப் போயிருக்கிறார்கள்.
(4) அவர்களுடைய மேசையில் இருக்கிற புத்தகத்தைப் பார்த்தேன்.
(5) அவர்கள் இருக்கின்ற கதிரைக்குக் கீழே ஏதோ இருக்கிறது. (.......)

# கற்பேர்ம்

1.17 "வல்லமை தாராயோ இந்த வையகம் வாழ்வதற்கே" இதில் செயப்படுபொருள்
(1) வாழ்வதற்கே (2) வல்லமை (3) வையகம் (4) தாராயோ
(5) நீ (.......)

1.18 உறுதிப்பாட்டோடு மறுக்கும் எதிர்மறை வாக்கியம்
(1) அவன் வருவான் என்பது எனக்குத் தெரியாது.
(2) இனிமேல் இங்கே வராதீர்கள்.
(3) அவன் நமது வீட்டுக்கு வரமாட்டான்.
(4) அவன் இப்போது படிப்பது இல்லை.
(5) அவன் இப்போது சத்தமாகப் பேசுகிறான் இல்லை. (.......)

1.19 பின்வரும் வாக்கியங்களில் உள்ள ஒரு சொல்லுடன் ஆகார வினா இணைந்து வராது. அவ்வாறு இணைந்து வராத சொல்லைக் கொண்ட வாக்கியம்
(1) அப்பா நேற்று எனக்குப் புத்தகத்தைப் பரிசாகத் தந்தார்.
(2) அப்பா எனக்குப் பெறுமதியான புத்தகத்தைப் பரிசாகத் தந்தார்
(3) அப்பா எனக்கு வாசிக்கும்படி புத்தகத்தைப் பரிசாகத் தந்தார்.
(4) அப்பா ஒவ்வொருநாளும் வாசிக்கும்படி புத்தகத்தைப் பரிசாகத் தந்தார்
(5) வாசிப்பினவசியத்தை உணர்த்த புத்தகத்தைப் பரிசாகத் தந்தார். (.......)

1.20 'செய்ய' என்னும் வினையெச்ச வாய்பாட்டின் அடிப்படையில் இணைக்கக்கூடிய வாக்கியங்கள் கொண்ட தொகுதி
(1) அவன் பாடினான், இவள் ஆடுகிறாள்.
(2) ஆசிரியர் கேள்வி கேட்பார், மாணவன் பதில் சொன்னான்.
(3) கண்ணன் பார்த்தான், அவள் மறைகிறாள்.
(4) அவன் விழுகிறான், இவன் தூக்கினான்.
(5) நீ பேசுகிறாய், நான் கேட்கிறேன். (.......)


(1 x 20 = 20 புள்ளிகள்)


# உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

39. பல்சக்கரைட்டுக்களின் சிறப்பியல்புகளைத் தருக.
- இவை மாமூலகக்கூறுகளாகவும் உயிர்ப்பல்பகுதியங்களாகவும் உள்ளன.
- பல்சக்கரைட்டுக்கள் ஒரு சிலவற்றிலிருந்து சில ஆயிரம் வரையான ஒருசக்கரைட்டு உப அலகுகளால் ஆக்கப்பட்டவை.
- இவை பளிங்குத்தன்மை அற்றவை.
- நீரில் கரையாதவை.
- வெல்லங்கள் எனக் கருதப்படாதவை.
- சில பல்சக்கரைட்டுகள் சேமிப்புக் கூறுகளாகத் தொழிற்பட, ஏனையவை உயிர் அங்கிகளின் கட்டமைப்புக்குப் பங்களிப்பை வழங்குகின்றன.
- தொழிற்பாட்டு அடிப்படையில் அவை சேமிப்புப் பல்சக்கரைட்டுக்கள் என்றும் கட்டமைப்பிற்குரிய பல்சக்கரைட்டுகள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.
- சேமிப்பு – மாப்பொருள், கிளைக்கோஜன்
- கட்டமைப்பு - செலுலோஸ், அரைச்செலுலோஸ், பெக்டின்.
- அவற்றின் ஒழுங்கமைப்பு அடிப்படையில் அவை நேரிய வடிவங்களாகவும் கிளைத்த வடிவங்களாகவும் பிரிக்கப்படுகின்றன.
- நேரிய வடிவங்கள் - செலுலோஸ், அமைலோஸ்
- கிளைத்த வடிவங்கள் - கிளைக்கோஜன், அமைலோபெக்டின், அரைச்செலுலோஸ்




பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## கல்லடி முகத்துவாரத்திலிருந்து காலப்ந்தாட்டத்தில் பிரகாசித்த மு.கிருபைராஜா



மட்டக்களப்பின் காலப்ந்தாட்டத்தில் சென்.அந்தனீஸ் கழகத்தினூடாக அடையாளங்காட்டப்பட்ட முக்கியமான வீரர்களுள் ஒருவராக "கிருபை" எனச் சுருக்கமாக அழைக்கப்படும் திரு முத்தையா கிருபைராஜா அவர்கள் விளங்குகின்றார். கல்வித் திணைக்களத்தில் காவலாளியாக அரச தொழில் புரியும் இவர், மட்டுநகரின் காலப்ந்தாட்டத்தில் 1990 களில் முக்கிய வீரனாகக் களமாடியவர்.

சென்.அந்தனீஸ் காலப்ந்தாட்ட அணியில் மத்தியகள வீரராக விளையாடிய இவர், மட்டக்களப்பு மாவட்ட காலப்ந்தாட்டத் தெரிவு அணியில் மத்தியகள வீரராக

**து.கௌரீஸ்வரன்**

அங்கம் பெற்று, சிறந்த ஆற்றுகையினை வெளிப்படுத்தியவர். 1990 களில் தொடர்ச்சியாக மாவட்டத் தெரிவு அணியில் இடம்பிடித்த குறிப்பிட்ட சில வீரர்களுள் ஒருவராக கிருபை அவர்கள் திகழ்ந்தார். ஏனெனில் கிருபையைப் போல் மத்திய களத்தில் திறமையாக ஆடக்கூடிய வீரர்களைக் காண்பது அந்நாட்களில் அரிதாக இருந்தது.



1990 களில் மட்டக்களப்பு மாவட்ட காலப்ந்தாட்டத் தெரிவு அணியின் காலஞ்சென்ற வின்சன், கிருபை, இளம் வீரராக அந்நாட்களில் விளங்கிய அன்ரன் ஆகிய மூவரும் தவிர்க்க முடியாத வகையில் தமது திறமையினை வெளிக்காட்டி இருந்தார்கள்.

திரு.கிருபை அவர்கள் களத்தில் ஆடுகின்ற போது எதிரணி வீரர்களுக்கு தொடர்ச்சியாக சவால் விடுகின்ற ஆட்டத்தை ஆடும் வீரராகவே காணப்படுவார். அதாவது எதிரணியின் மத்திய கள வீரர்கள் பந்தினைத் தம்வயப்படுத்தி நிதானமாக முன்னகர்ந்து பந்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு இடம்கொடாத ஒரு சுறுசுறுப்பான ஆட்டத்தை ஆடுவது இவருடைய ஆற்றுகையாக இருந்தது. இதன் காரணமாகத் தெரிவு அணியில் கிருபையை உள்ளடக்க வேண்டியது அக்காலத்தில் செயற்பட்ட மாவட்டத் தெரிவு அணித் தேர்வாளர்களுக்கு இன்றியமையாததாக இருந்தது.

கிருபை அவர்கள் பிரதானமாக மத்திய களத்தில் ஆடினாலும் மைதானத்தின் சகல பகுதிகளிலும் சுறுசுறுப்பாக நகர்ந்து ஆடுகின்ற சகலதுறை ஆட்டக்காரராகவே இயங்குவார். சில சந்தர்ப்பங்களில் மைதானத்தினுள் உபாதைகளுக்குள்ளாக நேர்ந்தாலும் அதனைப் பெரிதாக கவனியாமல் தொடர்ந்து விளையாடுவதில் முனைப்புடன் இயங்குவார். காயமடைந்து இரத்தம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் கிருபை அவர்கள் காலப்ந்து ஆடிய சந்தர்பங்களை காலப்ந்து இரசிகர்கள் அறிவர்.

திரு கிருபை அவர்கள் அணிக்கு பதினொருவர் ஆடும் நியம முறையிலான காலப்ந்தாட்டத்தை சென்.அந்தனீஸ் அணியில் ஆடிய அதேவேளை, உள்ளூரில் நடைபெற்ற அணிக்கு எழுவர் ஆடும் போட்டிகளில் கல்லடி கடல்மீன்கள் அணிக்காக விளையாடினார். செவணசைட் போட்டிகளில் 1980,90 களில் கடல் மீன்கள் அணி முன்னிலையில் திகழ்ந்திருந்தமை தெரிந்ததே.

இத்தோடு கிருபை அவர்கள் தனது சொந்த ஊரான கல்லடி முகத்துவாரத்தில் சக்தி விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் ஒரு காலப்ந்தாட்டக் கழகம் இயங்குவதற்கான பங்களிப்பையும் வழங்கியிருந்தார்.

கிருபை அவர்கள் காலப்ந்தாட்டத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு விரும்பியதில்லை, புதிய இளம் வீரர்களுக்கு வாய்ப்பினை வழங்கிக் கொண்டு தொடர்ந்து காலப்ந்தாட்டம் ஆடுவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

பின்னாட்களில் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில் இணைந்து காலப்ந்தாட்டத்தில் பங்குபற்றியிருந்தார். இவ்வாறு மட்டுநகரின் காலப்ந்தாட்டத்தில் தொடர்ந்து பயணித்த கிருபை எனும் வீரனை களப்பூரின் அரங்கத்தில் வாழ்த்தி மகிழ்வோம்.

## பிரதே செயலக மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் KSC மாபெரும் வெற்றி



2019 ஆண்டுக்கான காரைதீவு பிரதேச செயலக மட்ட கரப்பந்தாட்ட போட்டி நேற்று விபுலானந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டியில் காரைதீவு விளையாட்டுக் கழகம்(KSC), விவேகானந்தா விளையாட்டுக்கழகம், ஜொலிகிங்ஸ் விளையாட்டுக்கழகம், ஸ்ரீ முருகன் விளையாட்டு கழகம் ஆகியவை பங்குபற்றின.



இப்போட்டிகளில் வெற்றி பெற்று இறுதிப்போட்டியில் காரைதீவு விளையாட்டுக்கழகம் மற்றும் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணியினர் மோதினர். இப்போட்டியில் காரைதீவு விளையாட்டு கழகம் 2-0 எனும் ரீதியில் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினை வீழ்த்தி மாபெரும் வெற்றியீட்டியது.

## 612 புள்ளிகளுடன் குறிஞ்சி இல்லம் முதலிடம்!



காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கல்லூரி அதிபர் தி.வித்யாராஜன் தலைமையில் நடைபெற்றது.



612 புள்ளிகளுடன் குறிஞ்சி இல்லம் முதலிடத்தையும்
473 புள்ளிகளுடன் மருதம் இல்லம் இரண்டாமிடத்தையும்
375 புள்ளிகளுடன் முல்லை இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

இவர்களுக்கான வெற்றிக் கேடயங்களை பிரதமஅதிதியான கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல் வழங்குவதையும் அதிதிகள் வரவேற்கப்படுவதையும் காணலாம்.
(படங்கள் காரைதீவு நிருபர் சகா)

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

தொடர்ச்சி...

## மட்டக்களப்பில் இறக்கும் மாடுகள்

செய்தனர்.

இந்த மாடுகள் இறப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பதாக தமக்கு தெரிய வந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி உதயராணி குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மாடுகளுக்கு போதிய நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாமையே பெரும் காரணமாக இருப்பதாகக் கூறும் அவர், சில இடங்களில் போதிய உணவு அவற்றுக்கு வழங்கப்படவில்லை என்றும் சில புழுக்கள் அவற்றுக்கு தொற்றியிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

ஆனால், 5000 இற்கும் அதிகமான மாடுகள் இறந்துபோயுள்ளதாக விவசாயிகள் கூறுகின்ற போதிலும் தம்மிடம் பதிந்த விவசாயிகளின் 242 மாடுகளே இறந்ததாக பதிவாகியுள்ளதாக திருமதி குகேந்திரன் கூறுகிறார். பலர் தம்மிடம் மாடு வளர்ப்பு குறித்து பதியாத காரணத்தால் தம்மால் உண்மையான எண்ணிக்கையை கணக்கிடுவது சிரமமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இருந்தபோதிலும் தாம் அவற்றுக்கு மருந்துகளை வழங்க ஆரம்பித்துள்ளதாகக் கூறும் திருமதி குகேந்திரன், நிலமை தற்போது முன்னேற்றமடைந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி...

## காதல் தோல்வியை உங்கள் வாழ்வின் வெற்றியாக்குங்கள்

உறவில் நீங்கள் எவையெல்லாம் நல்லவை என்று நினைத்தீர்களோ அவைஎல்லாம் உங்களுக்கு பெரிய பிரச்சினையாக தோன்றும்.

அப்போது உங்களுக்கு அவர்களின் குறைகள் மட்டுமே கண்ணுக்கு தெரியும். ஏன் மீண்டும் இந்த உறவுக்குள் வந்தேனோ இதை விட பிரிந்தே இருந்திருக்கலாம் என தோன்றும். உங்களுடைய வெற்றி உங்களுக்கு என்று ஒரு இலக்கை உருவாக்கிஅதை நோக்கி பயணம் செய்யுங்கள். உங்களை வேண்டாம் என்று சொன்ன ஒருவருக்காக இவ்வளவு காலமும் எவ்வளவோ செய்திருப்பீர்கள். அதை இன்று உங்களுக்காக உங்கள் முன்னேற்றத்திற்காக செய்யுங்கள். நீங்கள் வெற்றிகரமான ஒரு வாழ்க்கையை வாழ்வது தான் உங்களை வேண்டாம் என்று பிரிந்து சென்றவருக்கு நீங்கள் கொடுக்கும் சிறந்த பதில்.

உங்கள் எதிர்பாலின நண்பர்கள் அதாவது ஆண்கள் பெண் நண்பர்களிடமும் பெண்கள் ஆண் நண்பர்களிடமும் உங்கள் மனம்விட்டு பேசுங்கள். அதுஅதிகம் மனஅமைதியை தரும். நம்முடைய வாழ்க்கையை நாம் தான் வாழ வேண்டும். தகுதியற்ற ஒருவருக்காக இந்த அழகான வாழ்க்கையை பாதியில் முடித்துக் கொள்ளாதீர்கள். உலகத்தில் நீங்கள் கைகொடுத்து தூக்கி விட வேண்டிய இயலாத மக்கள் பலர் உங்களை சுற்றி இருக்கிறார்கள். உங்கள் வெற்றியின் மூலம் அவர்கள் வாழ்க்கையையும் உயர்த்துங்கள்.

அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை வாழுங்கள்.

தொடர்ச்சி...

## கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 3)

அழகியலாலும் ஏனைய பிரதேச மக்கள் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்திற்கு வந்து தமது தளபாடங்களைக் கொள்வனவு செய்வது சிறப்பாகும். நுகர்வோரின் தேவைக்கேற்பவும், தமது சுயமான எண்ணக் கருவினாலும் செதுக்கலுக்கான அலங்கார வடிவங்களைத் தெரிவு செய்வதாயும் அலங்காரத்தின் தன்மைக்க ஏற்ப கீறுளி, கொத்துளி, வட்ட உளி போன்ற செதுக்கல் உபகரணங்களைப் பயன்படுத்துவதாக இப்பிரதேச செதுக்கற் கைவினயாளர்கள் கூறுகின்றனர்.

### பெற்றிக் கைவினை

சர்வதேச சுற்றுலாத் துறையில் இலங்கைக்குப் பெயர் பெற்றத்தரும் மற்றுமொரு கைவினையே பெற்றிக் கைவினையாகும். கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மற்றும் பொத்துவில் பகுதிகளில் இக்கைவினை மேற்கொள்ளப்படுகின்றது.

பெற்றிக் அரங்காரம் செய்ய பருத்தித் துணிகளே பயன்படுத்தப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட துணியினை சட்டகத்தில் பொருத்தி அலங்காரங்கள் கோடுகளாக இடப்படுகின்றன. இங்கு வெள்ளை நிறமாக வரவேண்டிய அலங்காரங்களை முதலில் மெழுகு பூசி மறைக்க வேண்டும். சாதாரண மெழுகுடன், தேன் மெழுகும் இணைந்த மெழுகுக் கலவை இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

மெழுகு காய்ந்தவுடன் அடுத்தாக வரக்கூடிய இளம் நிறத்திலான அலங்காரத்தைப் பெற நிறச் சாயத்தில் துணியை இட்டு நன்றாக நிறம் ஏறிய பின் இளம் வெயிலில் காய விடவேண்டும். பின் அவ் அலங்காரத்தின் மேல் மெழுகைப் பூசி அடுத்த அலங்காரத்திற்கான நிறச் சாயத்தில் துணியை இட வேண்டும்.

இவ்வாறு பூரணமான அலங்காரத்தைப் பெறும் வரை படிமுறைகள் செய்யப்படுகின்றன. இங்கு வெள்ளைக்கு அடுத்தாக இளம் நிறங்கள் படிப்படியாக பாவிக்கப்பட்டு அடர்த்தியான நிறங்கள் வரும்வரை செயன்முறைகள் செய்து இறுதியாக இளம் வெயிலில் மீண்டும் காயவிட்டு கொதி நீரில் துணியை அவித்தால் துணியிலுள்ள மெழுகு கரைந்து, இறுதி வடிவம் பெறப்படுகின்றது.

மலர்க் கொடி அலங்காரங்களும், மீன், அன்னம், யானை போன்ற விலங்குகளும் அலங்காரத்திற்காக இப்பிரதேச பெற்றிக் கைவினையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்றன.

சிறப்பான பெறுதியைப் பெற அதிக மனித உழைப்பும், நுட்பமும் தேவைப்படுவதுடன் Turkid Oil போன்ற மூலப் பொருட்களும் இங்கு அவசியப்படுகின்றன.

அவதானமாகச் செய்யவேண்டிய இக்கைவினையை மேற்கொள்பவர்கள் மூலப் பொருட்களைப் பெறுவது, விற்பனை என்பவற்றில் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாக பெற்றிக் போன்றே செயற்கை முறையில் அச்சிடப்பட்ட துணிகளும் இருப்பதால் விலை குறைவான அவற்றையே நுகர்வோர் வாங்குவதாகவும் இக்கைவினையாளர்கள் கூறுகின்றனர். (தொடரும்)

தொடர்ச்சி...

## 'அது பாம்பு அல்ல விலாங்கு மீன்'

நன்னீர் மற்றும் கடல் நீர் விலாங்கு மீன்கள் பொதுவாக ஜப்பான் நாட்டில் உண்ணப்படுகின்றன. அவ்வுணவை unadon and unajū என்றழைப்பர். ஆனால் இவை மிகவும் விலையுயர்ந்த உணவுவகை. கிட்டத்தட்ட 120 தொடக்கம் 140 டொலர்வரை விற்கப்படுகின்றன. இவ் உணவுவகைக்கு ஐரோப்பிய விலாங்கு மீன்கள் பிரபல்யமானவை.

இவ்விலாங்கு மீன்களின் இரத்தத்தில் மனிதனுக்கும் ஏனைய முலையூட்டிகளுக்கும் நச்சுத்தன்மையை ஏற்படுத்தும் புரதம் காணப்படுகின்றது. ஆனால் சமைக்கும் முறையும் எமது செரிமானமுறையும் இந்த நச்சுத்தன்மையான புரதத்தை அகற்றும். விலங்கு மீன்களின் இரத்தத்தில் இருந்து நச்சுத்தன்மையை உறிஞ்சும் முறையை கண்டறிந்தமையும் சால்ஸ் றோபட் ரிச்செட் நோபல் பரிசு வெல்வதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. எது எவ்வாறு இருந்தாலும் எமக்கு தெரியாமல், எமது கண்ணுக்குப் புலப்படாமல் பல உயிரினங்கள் இவ்வுலகில் வாழ்கின்றன. அவற்றை நாம் அறியும் போது நாம் ஆச்சரியமடைகின்றோம்.

தொடர்ச்சி...

## குடிநோயாளர்களின் ஒரு தேவதை ...

### எதிர்காலத் திட்டம்.....

தற்போது எமது இல்லம் உள்ள வளவினுள் தோட்டம் ஒன்றை நிர்வகித்து வருகிறோம். இது முற்று முழுதாக இயற்கை சார்ந்து காணப்படுவதுடன் இங்கு வரும் குடி நோயாளர்களுக்கு ஒரு மன நிம்மதியையும் மன மாற்றத்தையும் தருகிறது. இதனை மேலும் விரிவுபடுத்தி, தோட்டத்துடன் சேர்த்து பல பறவைகள் விலங்குகள் வளர்க்க வேண்டும் என்பதும் வேலையின்மையும் கூட குடிப்பழக்கத்திற்கு காரணமாக அமைவதனால் தொழில் சார் பயிற்சிகள் கொடுத்து அனுப்பக் கூடிய இடமாகவும் இதனை மாற்றியமைக்க வேண்டும் என்பதும் எனது கனவாக உள்ளது. இதற்கான திட்டமிடலை முன்னெடுக்க இடம் ஒதுக்கித் தர அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி தேவையாய் உள்ளது.

### எதிர்பார்ப்பு....

ஜனாதிபதியின் கூற்றுப்படி இலங்கையில் 20,000 குடி நோயாளர்கள் ஒவ்வொரு வருடமும் குணமடைய வேண்டும் என்பதாக இருக்கிறது . இலங்கையில் மொத்தம் 20 குடி நோயாளர் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவ்வாறெனில், ஒவ்வொரு நிலையத்திலும் வருடத்திற்கு 1000 குடி நோயாளர்கள் குணமடைய வேண்டும். ஆகவே அதற்கான திட்டத்தினையும் இட மற்றும் நிதி ஒதுக்கீட்டையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால் ஜனாதிபதியின் கனவை நனவாக்க நாம் தயாராக உள்ளோம். அத்தோடு இவ்வாறான குடி நோயாளர்களை குணப்படுத்தும் சேவையை செய்யப் பலர் தேவைப்படும் போதிலும் எவருமே விரும்பி இச்சேவையை செய்ய முன் வருவதில்லை என்பது கவலையான விடயமாக உள்ளது. இளைஞர் யுவதிகள் இதற்காக பயிற்சிகளைப் பெற்று இச்சேவையில் இணைந்து கொள்ள முடியும். அதற்கான விழிப்புணர்வுக் கூட்டங்களையும் பயிற்சிகளையும் வழங்க நாம் தயாராக உள்ளோம் என்பதையும் கூறிக் கொள்கின்றேன்.

தொடர்ச்சி...

## சொத்துக்களை பகிரங்கமாக பிரகடனம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்

இந்த செயற்பாடு வெளிப்படையான நாடாளுமன்றம் மற்றும் பலமான ஜனநாயகம் ஆகியவற்றை நோக்கிய முக்கியமான ஒரு அடி என டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நாஷனல் கூறியுள்ளது.

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல் தடவையாக இப்படிச் செய்தமை இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. இந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் இந்த ஏற்பாடு முடிந்துபோகுமானால் இந்த முயற்சி ஒரு தோல்வியாகக் கருதப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். மக்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களை, அவர்களது சொத்துக்களை பிரகடனம் செய்யுமாறு கோர வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தொடர்ச்சி...

## மனித உணர்வுகளினை அடிப்படையாக கொண்டு நகரும் சந்தைப்படுத்தல் உத்திகள்

தன்மையினையும் வழங்குகின்றது. இவற்றிற்கு அடிப்படையாக மனித உணர்வுகளையே தமது சாதனமாக பயன்படுத்துகின்றனர்.

விளம்பரப்படுத்தலானது அதிகளவில் மனித உணர்வுகளையே தங்கியிருக்கின்றது என பல ஆராய்சிகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஆறு முக்கிய மனித உணர்வுகளை தமது தந்திரோபாயங்களுக்காக உபயோகிக்கின்றனர். (ஆச்சரியம், கவலை, கோபம், பயம், வெறுப்பு மற்றும் சந்தோசம் ).

இவற்றினடிப்படையில் உணர்ச்சி நிலையென்பது எப்போதாவது எம்மால் உணரப்படுகின்ற ஒருவித உணர்வு சார்ந்த அனுபவ நிலையாகும். நாம் உணரும் தூண்டுதலைப் பொறுத்து எமது உணர்வு நிலையானது நாளுக்கு நாள் அல்லது கணத்திற்கு கணம் வேறுபடுகின்றது. இவ்வகையான உணர்வு நிலையானது வெளிப்படுத்தக் கூடியதும் வெளிப்படுத்த முடியாமலும் இன்னமும் உள்ளன.

இவ் உணர்ச்சி நிலையானது மனித அனுபவத்தின் சாதாரண மற்றும் அசாதாரண சிக்கல் வாய்ந்த தொடர்பாடல் முறைகளையும் தோற்றுவிக்க முனைகின்றது. அந்தவகையில் வாய்மொழி மூலமாகவோ அல்லது முகபாவனை மற்றும் மொத்த உடல் இயக்கங்கள் சைகைகள் மூலமாகவோ உணர்ச்சிகள் பிரதிபலிக்கப்படுகின்றன. உணர்ச்சிகளானது தொடர்பாடல் செயன்முறையின் முழுமைக்கு பயன்படுகின்ற ஓர் கருவியாகும்.

இக்கருவியினை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் குறித்த சமூக கலாச்சார பிரதிபலிப்புக்களையும் மற்றும் உரிய சட்டதிட்டங்களுக்கமைவாகவும் தமது சந்தைப்படுத்தல் நடவடிக்கையினை மனித உணர்லுகளுடன் தொடர்புபடுத்தி இக்கால வணிகர்கள் தமது தந்திரோபாயத்தை நகர்துகின்றனர். இதுவே தற்காலத்தில் எவ்வகையான தொடர்பு சாதனங்கள் உருப்பெற்றாலும் மனித உணர்வுகளை அடிப்படையாக வைத்துக்கொண்டே தமது விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கையினை மேற்க்கொள்கின்றனர்.




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa